
பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்




சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ 2. 50

When, only The best is Good Enough



Buy Solide Pumps

கலி: 4 விபவ ஸூ தை மீ 10 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 14 (23-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 51

# கருணாநிதி முதலமைச்சர்!
# தி.மு.கவுக்கு பெரு வெற்றி!!

## ஜெயலலிதா வெற்றி! நிர்மலா மண் கவ்வினர்!!



போடிநாயக்கனூர் தொகுதியில் செல்வி. ஜெயலலிதா வெற்றி பெறுவது நேற்று இரவே உறுதியாகிவிட்டது.

அங்கு ஜெயலலிதா, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அ. தி. மு.க. (ஜா) வேட்பாளர் வெண்ணிற ஆடை நிர்மலாவை விட 45ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று முன்னணியில் நின்றார்.

ஜெயலலிதாவின் வலது கரமாக விளங்கிய முன்னாள் அமைச்சர் திரு. எஸ். டி. திருநாவுக்கரசு அறந்தாங்கி தொகுதியில் வெற்றி பெற்றார்.

## தெற்கில் நேற்று 17 பேர் பலி!

கொழும்பு, ஜன 23

தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற வன்செயல்களில் 17 பேர் உயிரிழந்தனர்.

அவர்களில் ஒருவர் வெலிகமவில் சுதந்திரக் கட்சி வேட்பாளராக வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருந்த ஹாசேன் ஹாஜியார் ஆவார்.

## பிராந்திய போக்குவரத்து சபை உருவாக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜன 23

வடக்கு,கிழக்குப்பகுதிகளைச் சேர்ந்த பிராந்திய போக்குவரத்துச் சபைகள் ஒன்றுடன் ஒன்று கூட்டிணைந்து செயல்படுவதை ஆராயும்விதமாக மூன்றுபேர் கொண்ட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு. எஸ் சனமரத்தினம், கிழக்குப் பிராந்தியப் போக்கு வரத்துச் சபைத் தலைவர் ஜனாப் முகம்மட் அலி, போக்குவரத்து அமைச்சைச் சேர்ந்த திரு பஞ்சாட்சரவேல் ஆகியோரே இந்தக் கமிட்டியின் அங்கத்தவர்களாவர். [உ-ஜ 10]

## 3 இந்தியப்படை அதிகாரிகள் வவுனியா மோதலில் பலி!

### இந்திய வானொலி அறிவிப்பு

கொழும்பு, ஜன 23

வவுனியாவில் நேற்று முன்தினம் நடந்த மோதல் ஒன்றில் மூன்று இந்திய அமைதிப் படையினரும் நான்கு போராளிகளும் உயிரிழந்தனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

உயிரிழந்த இந்திய அமைதிப் படையினர் அதிகாரிகள் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு மோதலில் ஒரு போராளி கொல்லப்பட்டார்; ஐந்து போராளிகள் சிறை பிடிக்கப்பட்டனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது.

## முன்னாள் உபவேந்தர் வித்தி காலமானர்

கொழும்பு, ஜன, 23

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் திரு. எஸ். வித்தியானந்தன் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

அவருக்கு வயது 66.

இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகம், யாழ் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்ட போது அதன் முதலாவது உபவேந்தராக திரு. வித்தியானந்தன் பணியாற்றினார்.

கடந்த வருடம் நடுப்பகுதிவரை தொடர்ந்து அவர் உபவேந்தர் பதவியை வகித்தார். அடுத்த பதவிக் காலத்துக்கும் அவரையே அப்போதைய உயர் கல்வி அமைச்சர் திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனா நியமித்திருந்தபோதிலும் அவர் அதனை ஏற்கவில்லை; ராஜினாமாச் செய்தார்.

பிரபல கல்விமானும் தமிழறிஞருமான அவர் தமிழ்க்கல்வித் துறைக்கு அரிய சேவை புரிந்தவர்.



தமிழ்க் கலாசார வளர்ச்சிபற்றி ஆய்வுகளைமேற்கொண்ட அவர் நாட்டுக்கூத்துப் போன்ற பாரம்பரியக் கலைகளுக்குப் புத்துயிர் அளித் (8ஆம் பக்கம் பார்க்க)



## காங்கிரஸும் ஜெயலலிதா அணியும் எதிர்க்கட்சித் தலைமைக்குப் போட்டி

சென்னை, ஜனவரி 23

தமிழக சட்டசபைத் தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டபடி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பெருவெற்றி கிடைத்திருக்கிறது. அதன் தலைவர் கலைஞர் மு கருணாநிதி தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்பார்.

நேற்று நள்ளிரவு வரை எண்ணப்பட்ட வாக்குகளின்படி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிபீடத்தில் ஏறுவதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மையிலும் விட அதிக தொகுதிகளில் வெற்றி பெறும் நிலையில் இருந்தது.

தி. மு. கவுக்கு அடுத்த இடத்தில், ஆகக்கூடிய தொகுதிகளைப் பெற்று எதிர்க்கட்சித் தலைமையைக் கைப்பற்றுவதற்கு அ தி. மு கவின் ஜெயலலிதா அணியும், இந்திரா காங்கிரஸ் கட்சியும் போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றன.

தமிழக சட்டசபையின் 234 தொகுதிகளில் 232 தொகுதிகளுக்கான தேர்தல்கள் கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றன.

வாக்குகள் எண்ணும் வேலை நேற்றுக் காலையில் ஆரம்பமாகின. வாக்குகள் எண்ணத் தொடங்கிய வேளையில் இருந்து பெரும்பான்மையான தொகுதிகளில் தி மு. கவே முன்னணியில் திகழ்ந்தது.

நேற்று நள்ளிரவில் முடிவுகள் வெளியான 86 தொகுதிகள்போக, எஞ்சிய 146 தொகுதிகளில் 120 இல் தி மு கவே முன்னணியில் நின்றது.

அ. தி மு க. ஜெயலலிதா அணி 14 தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் 12 தொகுதிகளிலும் முன்னணியில் நின்றன. (உ-எ)

## ஜானகி தோல்வி அவரது அணியும் 'அவுட்'!

சென்னை, ஜன 23

அ. தி மு க (ஜானகி) அணியைச்சேர்ந்த வேட்பாளர்கள் எவருக்கும் வெற்றி வாய்ப்பு இல்லை என நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

நேற்றிரவுவரை வெளியான முடிவுகளின்படி சேரன்மாதேவி தவிர மற்ற எல்லாத் தொகுதிகளிலும் ஜானகி அணி வேட்பாளர்கள் பின்னணியிலேயே நின்றனர்.

ஆண்டிப்பட்டித் தொகுதியில் ஜானகி அம்மையாரே மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார்.

ஆண்டிப்பட்டித் தொகுதியில் நேற்று நள்ளிரவு வரை எண்ணப்பட்ட வாக்குகளில் தி. மு.க வேட்பாளர் திரு. பே ஆசையன் சுமார் 50 ஆயிரம் வாக்குகள் பெற்று முன்னணியில் நின்றார்.



அவருக்குஅடுத்து ஜெ. (8 ஆம் பக்கம் பார்க்க)

## 69 வீதம் வாக்களிப்பு

தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலில் 69.06 சத வாக்காளர்கள் வாக்களித்தனர்என்றுநேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## பத்தாவது ஆண்டு விழா

இலவச பாடப்புத்தகம் வழங்கி பத்தாண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்படுகிறது.

மொரட்டுவ டிரோன் பெர்னான்டோ விளையாட்டரங்கில் நடைபெறும் இவ் விழாவில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவும். திருமதி ஹேமா பிரேமதாசவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (அ)

## யாழ் நகரைக் கட்டி எழுப்ப முன்னோடித் திட்டம் அமுல்

### யாழ்ப்பாணத்தில் முதலமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன 23

யாழ் மாநகரம் திட்டமிடப்பட்டு மீண்டும் கட்டியெழுப்பப்படும். இதற்கென முக்கிய திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படும்.

யாழ். மாநகராளுமன்றக் கட்டடம், சுப்பிரமணியம் பூங்கா முனியப்பர் ஆலயப் பகுதி, துரையப்பா விளையாட்டரங்கு ஆகியவை ஒரு முன்னோடித் திட்டத்தின் [Pilot project]கீழ் கட்டி எழுப்பப்படும்.

இந்த முன்னோடித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு யாழ் உள்ளூராட்சித்திணைக்களத்தின் ஆணையாளரும், யாழ் மாநகராட்சிமன்ற ஆணையாளருமான திரு. அன்ரன் அல்பிரட் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ். கச்சேரியில் இடம்பெற்ற முக்கிய மாநாடு ஒன்றில் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்:

இந்த மாநாட்டில் யாழ் அரசாங்க அதிபர் (8ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

23-01-1989
தை-10
திங்கட்கிழமை

சுபநேரம்:
12 36 முதல் 2.06 வரை
ராகுகாலம்:
8 06 முதல் 9 36 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## சிவாஜி கோட்டை விட்டார்! த. மு. மு.வும் சரிந்தது!!

சென்னை, ஜன 23

திருவையாறு தொகுதியில் தமிழக முன்னேற்ற முன்னணி தலைவர் சிவாஜி கணேசன் தோல்வியடைந்தார்.

தி. மு. க வேட்பாளர் துரை சந்திரசேகரனிடம் 10 ஆயிரத்து 643 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோற்றுப் போனார்.



சிவாஜி கணேசனின் தமிழக முன்னேற்ற முன்னணி வேட்பாளர்கள் அனேகமாக எல்லாத் தொகுதிகளிலும் மிக அதிகப்படியான வாக்குகளினால் தோல்வியுற்றனர். (உ)

## அமைச்சர் குழாம் கூண்டோடு 'அவுட்'

சென்னை, ஜன 23

எம். ஜி.ஆரின் ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாக இருந்த பல பெரும் தலைவர்கள் — வி ஆர். நெடுஞ்செழியன் உட்பட — தோல்வியுற்றனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ ஆர். எம் வீரப்பன்
★ வி வி சாமிநாதன்
★ எஸ்.ரி சோமசுந்தரம்
★ நல்லுசாமி
★ இராகவானந்தம்
★ காளிமுத்து
★ கே.ஏ கிருஷ்ணசாமி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மூப்பனார் தப்பினார்! குறைந்த வாக்கு வித்தியாசத்தில்

இந்திரா காங்கிரஸின் தமிழகத் தலைவர் ஜி.கே. மூப்பனார் மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியிலிருந்து தப்பினார்.



தம்மை எதிர்த்து நின்ற தி மு. க. வேட்பாளர் எஸ் கல்யாணசுந்தரத்தை ஆயிரத்து 580 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் வென்றார்.

இத்தொகுதியில் அ. தி. மு. க. (ஜானகி) சார்பில் போட்டியிட்ட — எம் பியான — வலம்புரி ஜானும் தோல்வியுற்றார்.

1977 முதல் ஏற்கனவே நடைபெற்ற நான்கு தேர்தல்களிலும் இந்திரா காங்கிரஸ் கட்சியே இத்தொகுதியில்வெற்றி பெற்று வந்திருக்கிறது.



முச்சந்தி முரளி



## கலைஞரின் மகனும் வென்றார்!

சென்னை, ஜன 23

கலைஞர் மு.கருணாநிதியின் மகன் மு. க ஸ்டாலின் சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் பெரு வெற்றியீட்டினார்.

அவர் இத் தேர்தலில் 15 ஆயிரம் அதிகப்படி வாக்குகள் பெற்றார்.

கடந்த தேர்தலில் இதே தொகுதியில் போட்டியிட்டு அவர் தோல்வியுற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## வெற்றி!

துறைமுகம் தொகுதியில் கலைஞர் கருணாநிதி 32 ஆயிரம் அதிகப்படி வாக்குகளினால் வென்றார். [உ]

## கடைசி நிலைவரம்!

சென்னை, ஜனவரி 23

இச் செய்தி எழுதப்படும் வரை வெளியான தேர்தல் முடிவுகளின் படி கட்சிகளின் நிலைவரம் வருமாறு:-

| | |
|---|---|
| வெளியான முடிவுகள் | — 210 |
| ✶ தி மு க. | — 135 |
| ✶ இந்திரா கா.(கூட்டணி) | — 26 |
| ✶ அ தி. மு. க (ஜா) | — 01 |
| ✶ அ.தி.மு.க.(ஜெ) (கூட்.) | — 29 |
| ✶ த. மு. மு. (சிவாஜி) | — ... |
| ✶ தி. மு. க. (கூட்டணி) | — 154 |

(உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய டீ பிறிசரும் இற்ருச்சி பிறிச்சும் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: நோர்த் அயன் என்ஜினியர்ஸ் 95, கன்னாட்டி வீதி, யாழ்ப்பாணம். [கன்னாதிட்டி காளி கோவிலுக்கு முன்பாக] (9054)

EN. வண் ஸ்ரீ A 50 கார்கள் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். 570, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (9049)

T.V Portable Video Tuner Battery Charger Radio Dinner Sets பாவித்த தளபாடங்கள் (ரங்கூன்தேக்கு) விற்பனைக்கு உண்டு. Mrs A. Rasiah Near 3rd Mile post, K K S Road, Kokuvil (9012)

தமிழ், ஆங்கிலவீடியோ படச்சுருள்கள் 850 சுற்றும், ஓடியோ மாஸ்ரர் 250 சுற்றும் மற்றும் Pioneer Audio Deck set Akai Hx—A 351W Pioneer Equalizer Video Lens ம்விற்பனைக்குண்டு. நேரில் or தபால்மூலமாக தொடர்பு Mannar Clinic, Mannar. T P. No 023-2005 (9038)

### காணி விற்பனை

ஏழாலை மெயின் றோட்டிற்கு அருகாமையில் [V.C அருகில்] தலைப்பவ தோட்டக் காணி 8பரப்பு [வீடு கட்டக்கூடியது] உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- புவனேசபாகு, ஈவனு மான்சி. ஏழாலை வடக்கு, ஏழாலை [C/1549]

### வலம்புரிச்சங்கு

இல்லங்களில் இலட்சுமி கரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் ஆராதனைகளுக்கும் உகந்த சிறந்த வலம்புரிச் சங்குகள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள: தாஸ் 188. புதச் செட்டித்தெரு கொழும்பு -13 (9221)

### கோழிக்குஞ்சுவிற்பனை

கோல்டன் கொமற். கைலேன், சில்வர்கைலேன் [பிலிமித்] கறுப்புப்புள்ளி சேவல்|புறெயிலர் R I R ஆகிய இன சேவல் பேட்டுக்குஞ்சுகள் 26-1-1989 வியாழனன்று விநியோகிக்கப்படும். தொகையான கொள்வனவிற்கு விசேட கழிவுண்டு. முன் கூட்டியே பதிவு செய்க. விபரங்களுக்கு: S T. R & சன், மாஸ்கடை, திருநெல்வேலி சந்தி, K சக்தி சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. [8858]

### கோழிக்குஞ்சு விநியோகம்
### Uplands Form

இரண்டு மாதத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையக் கூடிய (DEKALB) இன பிறவன் சேவல குஞ்சு (1-2-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூபா. 4.50 முன்கூட்டியே பதிவுசெய்க இல. 9 சந்தையாலேன் சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9222)

### சமூகக்கல்வி நூல்கள்/ பயிற்சிகள்

சமூகக்கல்வி ஆண்டு 6, 7, 8, 9, 10, 11ஆம் வகுப்புகளுக்குரிய நூல்களும், பயிற்சிகளும் தனித்தனியே வெளிவந்துவிட்டன. ஆக்கியோன்; க. குணராசா, ஸ்ரீலங்கா புத்தகசாலை. யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (8960)

### தேவை

டொபிகம்பனியில் வேலைசெய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும் இல-7 நிக்கலஸ் லேன், கச்சேரி நல்லூர் வீதி, கண்டுக்குளி (9045)

நல்ல நிலையிலுள்ள 30 சிறிக்கு பின் இலக்கமுடைய வெஸ்பா (espa) ஸ்கூட்டர் தேவை. தொடர்பு:- J P T. Ltd 3 நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம். (9213)

### தவறிவிட்டன

அன்ரனி பர்னந்து அன்ரன் மரியநாயகம் எட்வின்பிள்ளை மேரி றேஸ் ஆகிய எமது அடையாள அட்டைகள் No. 600281550V 637162284 V கொழும்புத்துறை மினிபஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (9220)

சி. கமலேந்திரன். அக்கரைப்பற்று 7, இல 621462246V ஆகியனது அடையாள அட்டை யாழ் நகரில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன் (9053)

### கல்வி

G. C. E (O/L)இல் கட்டாய பாடமாகிய கணிதபாடத்தினை புதிய பழைய கல்வித்திட்டத்திற்கமைய 21 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேஷ சித்திக்கு சகல போசன்களும் 1 மாதத்திற்குள் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குளி. (9217)

### தபால் மூலம் ஆங்கிலம்

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பினைத் தேடுவோருக்கும் ஆங்கிலத்தில் பரீட்சைகள், பயிற்சிகள் செய்வோருக்கும். இன்றியமையாத மொழியான ஆங்கில மொழி ஆரம்பத்திலிருந்து முழு விளக்கங்களுடன் தபால் மூலம் போதிக்கப்படும் விபரங்களுக்கு சுயவிலாசமிட்டு முத்திரை ஒட்டிய தபாலுறை மூலம் தொடர்பு கொள்ளவும் 60/3 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (9206)

### NEW CITY TRADERS

சகல விதமான சுவர் மணிக்கூடுகள் கைக்கடிகாரங்கள் மேசை மணிக்கூடுகள், film roll வகைகள். சூட்கேஸ். Travelling bags, School bags, Wheel bags, எவர்சில்வர் பொருள்கள், glass, மற்றும் அன்பளிப்புப் பொருள்களை பெற்றுக் கொள்ள New City Traders 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் [C/1536]

### சுஜேரா ரவல்ஸ்

ஜேர்மனி [Germany]க்குப பிரயாணம் செய்ய விரும்புவோர் தாமதியாது சுஜேரா ரவல்ஸ் இல 21, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் (C/1324)

### சேவை

யாழ் சைனீஸ் முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் தினசரி இரவு7 30 வரை திறந்திருக்கும். அறைகள் வாடகைக்கும் உண்டு. (9207)

### St. JUDE

Thank you for all the favours received please Continue to help S. K.T. (9216)

# மனித உரிமைகள் சாசனம்; உலகநாடுகள் உணரவில்லை

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

சாவகச்சேரி, ஜன 23

மனித உரிமைகள் சாசனம் என்பது ஒரு பெரிய மாளிகை போன்றதாகும். இம்மாளிகையின் அறைகளை உலகில் எந்த நாடுமே இன்னமும் சரியாகப் பார்த்துக் கொள்ளவில்லை எனத் தெரிகின்றது.

இவ்வாறு கூறினார் கைதடி நவீல்ட் பாடசாலையின் துணை அதிபர் திரு. கே. கோபாலகிருஷ்ணன்.

அறவழி பணியகத்தில் புதிய சமுதாய வெளியீட்டகத்தினால் ஏற்படுத்தப்பட்ட 'மனித உரிமைகள் ஒரு கைநூல்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்தும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக்குழுவின் தலைவர் திரு. வீ எஸ் துரைராஜா தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவின் போது, நூலின் முதல் பிரதியை வைத்திய பணி பே. பிலிப்ஸ், செயலாளர் திரு. க. ஜீவதாஸிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் பண்டிதர் செ. சிவலிங்கம் திருவாளர்கள் எஸ் நடேசபிள்ளை, ஐ கணேசன் ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர்.

திரு சண். காளிதாஸ் நன்றியுரை கூறினார். (க-31)

## ஆண்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம் ஜன 23

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (க)

## அஷ்டபந்தன அபிஷேகம்

யாழ்ப்பாணம் ஜன 23

புங்குடுதீவு மத்தி தென் பெருந்துறை சிவன் ஆலயத்தில் நாளை 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அஷ்டபந்தன அபிஷேகம் நடைபெறும். (உ-க)

## 10 ஆம் திகதி பட்டமளிப்பு

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வரும் முறைசாராக்கல்வி நிறுவனத்தின், கடந்த ஆண்டுக்கான பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்கு பட்டமளிப்பும் சான்றிதழ் வழங்கல் நிகழ்ச்சிகளும் பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறும், கல்லூரி அதிபர் திரு எஸ். மகேஸ்வரசவேலு இத்தகவலைத் தெரிவித்துள்ளார். (உ-90)

## விலை குறைப்பு

விவசாயிகள் மீனவர்களின் நலன் கருதி பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மண்ணெண்ணெயின் விலையினைக் குறைத்துள்ளது.

சங்கக் கிளைக் கடைகளில்ஒரு லீட்டர் மண்ணெண்ணெய் 7 ரூபா 50சதமாக விற்பனை செய்யப்படுகிறது. (க-144)

## ஊர்காவற்றுறையில் உள்ள
# பயணிகள் தங்குமிடத்தை சீரமைக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை ஜன 23

ஊர்காவற்றுறை பழையதுறைமுகப்பகுதியில் அமைந்துள்ள பிரயாணிகள் தங்குமிடத்தை திருத்தியமைக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.


காரைநகருக்கும், ஊர்காவற்றுறைக்கும் இடையில் வள்ளங்களில பிரயாணம் செய்வோருக்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இதனை உடனடியாக சீரமைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

கடந்த கால அசம்பாவிதங்களின் போது இத் தங்குமிடம் சேதமாக்கப்பட்டது. எஞ்சியிருந்த மரங்களும் ஓடுகளும் களவுபோயின.

தற்போது இத்தங்குமிடம் மொட்டையாகக் காட்சிதருகிறது இதனால் மழைக்காலங்களில் இங்கு வரும் பிரயாணிகள் பெரும் கஷ்டமுறுகின்றனர்.

தினமும் ஏராளமான பயணிகள் தொடர்ச்சியாக காரைநகர் அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களிலிருந்தும் இப்பகுதிக்கு வந்து போவது குறிப்பிடத்தக்கது. (க-16)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### சுப்பிரமணியம் - பாலச்சந்திரன் [பாலா - மதி]

அன்னையின் மடியில் : 28 - 12 - 1960
ஆண்டவன் அடியில் : 10 - 12 - 1988

'பாசத்தின் குல விளக்கே பாலா!
நின் பாதை மாறியதோ பாராய்
மதி என்ற மட்டற்ற பெருமையடா
மாபெரும் தலைமை தனை ஏற்றாயோடா
நின் காலடி ஓசை கேட்டிருப்போம்
கலங்கரை விளக்குப் போல் ஒளியாகினாய்
காலமெல்லாம் உனக்காக காத்திருந்தோம்
பெரும் காலன் வசப்பட்டு விட்ட செய்தியோடா
கலங்கிய எமக்கிங்கே காலமெல்லாம் நீயே தான்
உன்னை எண்ணி வாடி நிற்கும் உயிர்களுக்கு என்ன பதில

உன் நினைவால் வாடி நிற்கும்

அம்மா, அக்காமார், அண்ணன்மார், தம்பி, அண்ணிமார், மருமக்கள், மைத்துனர், மச்சான்மார், மாமிமார், மகன்மார், உற்றார், உறவினர், நண்பர்கள், ஈழம் வாழ்மக்கள் அனைவரும்.

எங்கள் அன்புச் செல்வத்தின் வீட்டுக் கிரியையில் [திங்கள் 23-01-89] கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தலைமன்கலட்டி,
தெல்லிப்பளை
உறவினர், நண்பர்கள்.

23-01-89 (9256)

## 6ம் ஆண்டிலேயே வாழ்க்கைத்திறன் கல்வி போதனை

மானிப்பாய் ஜன 23

பாடசாலைகளில் ஆறும் ஆண்டிலேயே வாழ்க்கைத்திறன் கல்விப் போதனையை அறிமுகப்படுத்துவதற்கான ஆயத்த நடவடிக்கைகளை கல்வி அமைச்சு எடுத்து வருவதாக தெரியவருகிறது

அநேகமாக 1991 ஆம் ஆண்டளவில் பாடசாலைகளில் இவை அறிமுகப் படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-90)

## பாடசாலையில் திருட்டு

மானிப்பாய் ஜன 23

மயிலணி மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கள்வர்கள் புகுந்து சுமார் 5 ஆயிரம் பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

காரியாலய மேற்கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பிரதான அலுமாரியை உடைத்து அதற்குள் இருந்த பொருள்களைத் திருடியுள்ளனர்

ஏற்கெனவே பலஇழப்புக்களை எதிர்நோக்கியிருக்கும் மாணவர் சமூகம் இது போன்ற சமூக விரோத செயல்களால் மேலும் பாதிப்படைவது கண்டிக்கப்படவும் தவிர்க்கப்படவும் வேண்டும் என மேற்படி பாடசாலை அதிபர் திரு. ஐ. மகேஸ்கரன் தெரிவித்தார். (உ-90)

## புண்ணிய திதி

யாழ்ப்பாணம் ஜன 23

புங்குடுதீவுதென்பெருந்துறை சிவன் ஆலயத்தில் தவத்திரு சதானந்த சுவாமிகள் சமாதியடைந்த 6 ஆவது வருட புண்ணியதிதி நாளை செவ்வாய்க்கிழமைஆத்ம ஜோதி நா. முத்தையா தலைமையில் நடைபெறும். (க)

# கலைகள் மூலம் கல்வி; போதனைக்கு புதியவழி

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் உரை

பருத்தித்துறை. ஜன 23

கல்வியை ஊட்டுவதற்குச் சிறந்த சாதனங்கள் கலைகள் மாணவர்கள் மத்தியில் கலை ஆர்வத்தை ஊட்டி அவர்களின் வாழ்க்கையை வளம்படுத்துவதில் அதிக கவனம் எடுக்க வேண்டும் கலை விழாக்கள் மூலம் மாணவர்கள் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

—இவ்வாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் கலைவிழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் 'இக் கல்லூரியின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது இந்த நடவடிக்கைகளைத் துரிதமாகச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

கல்லூரி அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

இந்த விழாவில் வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி உட்பட பலர் உரை நிகழ்த்தினர்

கல்லூரி மாணவத் தலைவி செல்வி கணபதிப்பிள்ளை வாசுகி நன்றியுரை வழங்கினார். (க 118)

## நீர்த் தொட்டி அமைப்பு

மானிப்பாய், ஜன. 23

நவாலி அட்டகிரி சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவர்களின் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு 5 ஆயிரம் ரூபா செலவில் நீர்த்தொட்டி ஒன்று நிறுவப்பட்டு வருகிறது

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் ஒத்துழைப்புடன் அமைக்கப்படும் இந்த நீர்த்தொட்டிக்கான நிதியை ரி ஆர் ஆர். ஓ. நிறுவனம் வழங்கியுள்ளது (உ-90)

## விருது

சென். ஜோன் அம்புலன்ஸ் படைப்பிரிவின் வட பிரதேச ஆணையாளராகக் கடமையாற்றும் திரு நாகேந்திரம் பேரஜன் அவர்கள். பிரித்தானிய மகாராணியின் கௌரவ விருது ஒன்றைப் பெற்றார்

'சென். ஜோனின் சேவைச் சகோதரன்' (Servicing brothers st John) என்பதே அவ் விருதின் பெயராகும். (க)

## அதிபர் பரீட்சை

பருத்தித்துறை, ஜன 23

இலங்கை அதிபர்கள் சேவையிலுள்ள I, II, III தரத்தினருக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை இம்மாதம் 28, 29 ஆம்திகதிகளில் நடைபெறவுள்ளது. (க-118)

# சுருவில் பொதுமயானத்தின் அவல நிலை

ஊர்காவற்றுறை ஜன23

ஊர்காவற்றுறை பகுதியில் அமைந்துள்ள சுருவில் பொது மயானத்தில் எதுவித வசதிகளும் இல்லாதபடியால்தகனக் கிரியைக்காக செல்லும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது

பிரதான வீதியிலிருந்து இம்மயானத்திற்கு செல்லும் பாதையான துசிரமதான முறையில் சீரமைக்கப்பட்டிருந்தும் விஷமிகளால் மண் வெட்டி யெடுக்கப்படுவதால் பாதையும் சிரழிந்து காணப்படுகின்றது அத்துடன் இம்மயானத்தில் இருக்கும் மடம் கூட சேதமடைந்தும் கூரையின்றியும் காணப்படுவதால் பொதுமக்கள் மேலும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

இம்மயானத்தில் கிணறு ஒன்று அமைக்கப்படுவது அவசியமெனவும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடு தொடர்புடையவர்கள் இம்மயானத்தை திருத்தியமைத்து, சுருவில், புளியங்கூடல், தணுவில் ஆகிய கிராமங்களிலிருந்து தகனக்கிரியைகளை மேற்கொள்ள வருபவர்களின் வசதிகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது (க-14)

## நிதி சேகரிக்க படக்காட்சி

மானிப்பாய் ஜன 23

நவாலி அட்டகிரி சைவத் தமிழ் வித்தியாசாலை அபிவிருத்திக்கு நிதி திரட்டும் நோக்குடன் தொலைக்காட்சிப் படம் ஒன்று இம்மாதம் 29 ஆம் திகதி நடத்தப்பட உள்ளதாக பாடசாலை அதிபர் திரு இ வல்லிபுரம் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கென காலையில்இரு காட்சிகளும், பெரியவர்களுக்கும் வெளியாட்களுக்குமாக மாலையில் இரண்டு காட்சிகளும் காண்பிக்கப்படும் (உ-90)

## தண்ணீர் இறைப்பு

சுழிபுரம் பறாளைப்பகுதியிலுள்ள நெற்பயிர்களுக்கு பம்புகள் மூலமாக தண்ணீர் இறைக்கப்படுகிறது

நெற்கதிர்கள் வந்தும் வராமலும் இருக்கபயிர்கள் வாடிப்போய் கிடக்கின்றன. (க-28)

# ஏல விற்பனை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருட்கள் 1989 ஆம் ஆண்டு தை மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் முறையே பின்வரும் பிரிவுகளில் ஏலத்தில் விற்கப்படும்

23ஆம் திகதி சித்த மருத்துவத்துறை, கைதடி காலை 10.00 மணி.

23 ஆம் திகதி இராமநாதன், நுண்கலைத்துறை மருதனமடம், காலை 11.00 மணி.

24 ஆம் திகதி மருத்துவபீடம், விஞ்ஞானபீடம் திருநெல்வேலி, காலை 10.00 மணி.

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருட்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக் கழக காசாளரிடம் செலுத்தி பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4.00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

(1) பெரிய கல்லு — சித்தமருத்துவத்துறை
(2) தண்ணீர் தாங்கி — இராமநாதன் நுண்கலைப்பிரிவு
(3) தறித்த பனைமரம் — ,, ,,
(4) பெரிய கல்லு — ,, ,,
(5) தண்ணீர் தாங்கி — மருத்துவ பீடம்
(6) கட்டிட கழிவுப் பொருட்கள் - மருத்துவபீடம் / விஞ்ஞான பீடம்
(7) கூரைத்தகடுகள் — மருத்துவபீடம்.

பிரதி பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(C/1345)

## 31-ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 08-05 1914

இறப்பு: 26 12-1988

### திரு. சோமசுந்தரம் ஏகாம்பரம்

எங்கள் அருமைத் தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று காலை கீரிமலையிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை செவ்வாய் பகல் சுன்னாகம் மேற்கு தம்பி முத்து வீதியிலுள்ள அன்னாரின் சகோதரர் கனகராசா அவர்கள் வீட்டிலும் நடைபெறும். உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏ. ஜெயகுமாரும் சகோதரர்களும்

398. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (9051)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு உதவும் முகமாக ஐ. நா. உயர் ஸ்தானிகரால் தெளி கருவிகள் வழங்கப்பட்டன. வைபவத்தில் முல்லை மாவட்ட சமநல சேவை உதவி ஆணையாளர் திரு செ. டஞ்சலிங்கம் உரையாற்றுகிறார். முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் உதவி அரசாங்க அதிபர் திரு சி. க. சர்வானந்தன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (இ-92)

## சட்டமாணிப் பரீட்சை: 40 பேர் மட்டுமே தோற்றினர்

யாழ்ப்பாணம், ஜன 23

கொழும்பில் நடைபெற்ற சட்டமாணிப் பட்டப் பயிற்சி நெறிக்கான தமிழ்மொழிமூல தேர்வுப் பரீட்சைக்கு 40 பேர் மட்டுமே தோற்றினர்,

இப்பரீட்சைக்கு 175 விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் செய்திருந்தனர் எனினும் 40 பேர் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றினர். இதன் காரணமாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில்சட்டமாணிப் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

யாழ் பிராந்திய நிலையத்தில் இப்பயிற்சியை ஆரம்பிக்க ஏற்னவே திட்டமிடப்பட்டிருந்தது சட்ட நூலக வசதிகள் இல்லாதகாரணத்தினாலும், விண்ணப்பிப்போர் தொகை குறைவாகவுள்ளதன் காரணமாகவும் இப்பயிற்சி நெறியை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

எனினும் தற்பொழுது யாழ் பிராந்திய நிலையத்தில் சட்ட நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் சட்டமாணிப்பயிற்சி நெறியைப் பயில விரும்புவோர் கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ் பிராந்தியப் பொறுப்பதிகாரி திரு. என் மகாதேவன் கோரியுள்ளார். (ஓ-10)

## வரட்சி நிவாரணம்

வவுனியா, ஜன. 23

வவுனியா மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் 17 ஆயிரம் குடும்பங்களுக்கு வரட்சி நிவாரண உதவிகள் வழங்கப்படவிருக்கின்றன.

செட்டிக்குளம் உதவி அரச அதிபர் பிரிவில் இந்நிவாரண உதவிகள் முதலில் வழங்கப்படும்.

திருகோணமலையில் கடந்தவாரம் இடம்பெற்ற அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான மாநாட்டின் போது காணப்பட்ட இணக்கத்தின் பிரகாரம், இந்த நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன (உ-164)

### சுகாதாரக் கல்வி குறித்து கருத்தரங்கு

ஊர்காவற்துறை, ஜன. 2

பாடசாலை மாணவர்களின் சுகாதாரக்கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 8-30 மணிக்கு புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் திரு. செ. நல்லையா தலைமையில் நடைபெறும்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜி கந்தசாமி, ஊர்காவற்றுறை மேற்பார்வைச் சுகாதார பரிசோதகர், புங்குடுதீவு பதில் சுகாதார பரிசோதகர், குடும்பநல சேவையாளர்கள், புங்குடுதீவு வலய விஞ்ஞான ஆலோசகர்கள் மற்றும் புங்குடுதீவு, நயினாதீவுப் பாடசாலைகளில் சுகாதாரத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றுவார்கள். (உ-19)

## கொழும்பில் 2 தினங்கள் பனம்பொருள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 23

1989 ஆம் ஆண்டின் பனம் பொருள் புனர்வாழ்வு, அபிவிருத்தி சம்பந்தமான செயற்பாட்டுக் கருத்தரங்கு எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் கொழும்பு சமநல ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் வட பகுதியிலுள்ள சகல தென்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களினதும் பனம் பொருள் அபிவிருத்தி நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் பங்கு பற்றுவர்

வடக்குக்கிழக்கு மாகாண அரச அதிகாரிகள் மற்றும் கூட்டுறவு வங்கி, நிதி அமைச்சு அதிகாரிகள் ஆகியோரும் கருத்தரங்கில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகள் அபிவிருத்திச் சபைத் தலைவரும், தென்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளருமான திரு. ச. நடராசா செய்துள்ளார்.

### பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன 23

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியம் மாவட்ட ரீதியில் நிலையங்களிடையே பேச்சுப் போட்டி ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது

இதற்கான விண்ணப்பங்களை ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் - விண்ணப்ப முடிவு திகதி ஜனவரி 31 என்றும் தெரிவிக்கப்படுகிறது. இதேசமயம் போருட் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் நிலையங்களின் நிர்வாகிகளுக்கு ஒன்றியம் நடத்தி வரும் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் நிலையப் பிரதிநிதிகள் ஒன்றியத்துக்கு விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றன: (உ-ச)

யாழ். போதனு வைத்தியசாலை

## சிறந்த ஓர் ஆஸ்பத்திரியாக இயங்க முழு அளவில் ஒத்துழைப்பேன்

### பதில் பணிப்பாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜன 23

யாழ் போதனு வைத்தியசாலையை ஒரு சிறந்த வைத்தியசாலையாக இயங்க வைப்பதற்கு எனது அனுபவத்தையும், திறமையையும், ஒத்துழைப்பையும் முழு அளவில் பயன்படுத்துவேன்.

யாழ் போதனு வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பம் சண்முகம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் போதனு வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு தற்போது தட்டுப்பாடு இல்லை. தேவையான மருந்து வகைகளை வெளியிலும் கொள்வனவு செய்ய முடியும்.

நோயாளிகளுக்குத் தேவைப்படும் பிராணவாயு (ஒக்ஸிஜன்) கையிருப்பில் தேவையான அளவு இருக்கிறது.

எனினும் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும், நிபுணர்களுக்கும் தட்டுப்பாடு இருக்கிறது.

கர்ப்பிணித் தாய்மார்களின் இறப்பு விகிதம் கடந்த மாதம் (மார்கழி) பூஜ்யம் என்பது குறிப்பிடத்தக்கது.

கர்ப்பிணித் தாய்மாருக்கு நல்ல மருத்துவப் பராமரிப்பு கிடைத்ததும் புதிய தாதிமார், மருத்துவ மாதர் ஆகியோரின் சேவை உரிய காலத்தில் கிடைத்ததுமே இந்த சாதனைக்குக் காரணமாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஜ)

உடல் ஊனம் அல்லது உயிரிழப்பினால்

# முல்லைத்தீவில் பாதிப்புற்றோருக்கு தகுந்த நிவாரணம் வழங்க ஏற்பாடு

மாங்குளம், ஜன. 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் அசம்பாவிதங்களின் போது பாதிப்புற்றோருக்கு தகுந்த நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

தகுந்த நிவாரணம் வழங்குவது தொடர்பாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளரினால் சுற்றுநிருபம் ஒன்று முல்லைத்தீவு அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

அச்சுற்று நிருபத்தில்:

83 ஜூலை 24 ஆம் திகதிக்குப் பின்னர் இனக்கலவரம், பயங்கரவாதச் செயல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்நாட்டு பதற்றநிலை ஆகியவற்றினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், ஊனங்கள் ஆகியவற்றுக்கு நிவாரணம் கோரி விண்ணப்பித்தோருக்கு தகுந்த நிவாரணம் வழங்க வழி கிடைத்திருக்கிறது.

இப்புதிய திட்டத்தின்படி நிவாரணம் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்:-

**உயிரிழப்பு**

★ உயிரிழந்தவர் விவாகமானவராக இருந்தால் அவரின் துணைவியாருக்கு 50 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப்படும் துணைவர் இல்லாவிடில் பிள்ளைகளுக்கும், அவர்களது உரித்தானவர்களுக்கும் இந்நிவாரணம் வழங்கப்படும்.

★ 21வயதுக்கு மேற்பட்ட விவாகமாகாத வளர்ந்தோர் இறந்தால் 25 ஆயிரம் ரூபாவும்-

★ 21 வயதுக்குட்பட்ட பராயமடைந்தவர்கள் உயிரிழந்தால் 15 ஆயிரம் ரூபாவும்-

அவர்களது அடுத்த உரித்தானவருக்கு நிவாரணமாக வழங்கப்படும்

**உடல் ஊனம்**

முன்னர் குறிப்பிட்ட நடவடிக்கையினால் ஒருவர் ஊனமுற்றால், அவருக்கு அரச வைத்திய அதிகாரியினால் பரிந்துரைக்கப்பட்டவாறு விகிதாசார ஊதிய இழப்பு அல்லது செயல் இழப்பின் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும்.

21 வயதுக்கு மேற்பட்டவருக்கு இந்நிவாரணத்தின் ஆகக்கூடிய தொகை 25 ஆயிரம்ரூபாவாக இருக்கும் பராயமடையாதவர்கள் ஊனமுற்றால் இத்தொகை ரூபா 15ஆயிரம் ரூபாவாக இருக்கும்.

இந்த நிவாரணம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பொருத்தமான ஆவணங்களை - மரண அத்தாட்சிப் பத்திரம், மரணவிசாரணை அறிக்கை, பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், வைத்திய சான்றிதழ் போன்றவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.

நிவாரணம் வழங்குவது தொடர்பாக மேற்படி சுற்றுநிருபம் தமக்குக் கிடைத்ததை அடுத்து முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் அது தொடர்பான அறிவுறுத்தல்களை தமக்கு கீழ் உள்ள உதவி அரச அதிபருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்

இந்த அறிவுறுத்தலில் பாண்டியன்குளம் உ. அ. அ பிரிவில் பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்பும், துணுக்காய், உ. அ. அ. பிரிவில் பெப்ரவரி 22 ஆம் திகதிக்கு முன்பும், புதுக்குடியிருப்பு உ. அ. அ பிரிவில் மார்ச் 8 ஆம் திகதிக்கு முன்பும், முல்லைத்தீவு உ. அ. அ. பிரிவில் மார்ச் 22 ஆம் திகதிக்கு முன்பும், விண்ணப்பங்கள் பூர்த்தியிடப்பட்டு கிராமசேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கப்படல் வேண்டும் என விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-94)

# புதிய உதவிஅரச அதிபர் பிரிவு உருவானதால் அபிவிருத்திக்கு வாய்ப்பு

தாளையடி, ஜன 23

"வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு உருவாக்கப்பட்டதினால், அப்பகுதியில் சமூக, பொருளாதார அபிவிருத்தி துரிதமாக ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது"

— யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் இவ்வாறு கூறினார்.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவையும், மருதங்கேணியில் உள்ள அதன் அலுவலகத்தினையும் வைபவரீதியாக கடந்த வெள்ளிக்கிழமை அவர் அங்குரார்ப்பணம் செய்து வைத்து அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் உரையாற்றும் போது, அரச அதிபர் மேலும் கூறியதாவது:-

பல சிரமங்களுக்கு மத்தியில்தான் இப்புதிய பிரிவு உருவாக்கப்பட்டது.

பல வருடங்களுக்கு முன்னர் இப்பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதும் நிதி பற்றாக்குறையினால் அதனை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

தென்மராட்சியையும் இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கும்படி சிபாரிசு செய்துள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் கிராமசேவையாளர் பிரிவுகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

கிராமசேவையாளர்களுக்கு ஊடாகவே நாம் மக்களைப் பார்க்கின்றோம்.

எனவே கிராமசேவையாளர்கள் பொறுப்பாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும் — என்றார்.

யாழ் செயலக தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு ஜீ. கோபாலரத்தினம்

### அரசஅதிபர்உரை

இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது —

பூகோள ரீதியிலும் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் வாழ்க்கை, பொருளாதாரம், தொழில் முறைகள் ஆகியவை பருத்தித்துறை பகுதி மக்களை விட வேறுபட்டிருப்பதினால், வடமராட்சி கிழக்கு தனியாகப் பிரிக்கப்படவேண்டியது அவசியமாயிற்று என்றார்.

வடமராட்சி கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ரீ. சந்திரசேகரம், கரவெட்டி உதவி அரச அதிபர் திரு. ஐயாத்துரை உட்பட பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர். (உ-144)

### பவுசர் அன்பளிப்பு

புங்குடுதீவு, ஜன. 23

புங்குடுதீவு மக்களின்குடிதண்ணீர்ப் பிரச்சனையைத் தீர்க்கும் முகமாக புனர் நிர்மாண அமைச்சு ... அன்பளிப்புச் செய்துள்ளது (ஜ)

## நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 23

இணுவில் சைவ மகாஜன மகாவித்தியாலயத்துக்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கீடு செய்து கட்டட வேலையைத் துரித கெதியில் ஆரம்பித்தமைக்காக இவ்வித்தியாலய அபிவிருத்திச் சபை யாழ் கல்விப்பணிப்பாளருக்கும் கட்டட வேலைகளைத் தாமதமின்றி செய்துவரும் கல்வித் திணைக்கள கட்டடப் பகுதியினருக்கும் நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை நிறைவேற்றியுள்ளது. (உ-ச)

## எரிக்கப்பட்ட வீடுகள் திருத்தம்

சாவகச்சேரி, ஜன. 23

நவம்பர் மாதம் 19 ஆம் திகதியன்று மட்டுவில் தெற்குப் பகுதியில் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது எரிக்கப்பட்ட 14 வீடுகளையும் திருத்தி அமைக்கும் பணியில் அறவழிப் போராட்டக்குழு ஈடுபட்டு வருகிறது.

இதற்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நிதி உதவி அளித்துள்ளது. (க-31)

## மாணவிகள் சித்தி

பருத்தித்துறை ஜன 23

1988 ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் வட இந்து மகளிர் கல்லூரியிலிருந்து தோற்றிய மனையியல் பிரிவு மாணவிகள் நூறுவீதம் சித்தி பெற்றுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் 72 சத வீதமானவர்களும், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 53 சத வீதமானவர்களும், கலைப் பிரிவில் 47 சதவீதமான மாணவர்களும், சித்தியடைந்துள்ளனர். (க-118)


An associate of The Maharaja Organisation Limited 1939-1989 50 YEARS The courage to be different.

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

S-Lon The No.1 PVC pipe



உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

S-Lon Lanka (Pvt) Ltd.
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596206 — 93716 - 9


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
01 - 02 - 1969

மறைவு :
23 - 01 - 1986

செல்வன்
### முத்துத்தம்பி விஜிதத்தம்பி
(மாவிட்டபுரம்)

உன் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

பெற்றோர்,
சகோதர சகோதரிகள்,
உறவினர்கள், ஆசிரியர்கள்
சக மாணவர்கள்.
[9251]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு :
27-03-1914
உதிர்வு :
23-01-1988
திதி: 10-02 1989

### சி. க. சண்முகம்
[முன்னாள் வர்த்தகர், அம்பிகா ஸ்ரோர்ஸ், இரத்தினபுரி]

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே! அன்பான ஜோதியே! எம்மை ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு அணைந்த எம் அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டகலாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

10ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(9259)

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 60ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு :
27-04 1934

உதிர்வு :
25-11-1988

### சின்னத்தம்பி - சண்முகலிங்கன்
(சண்)

இவர் முன்னாள் முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்கள எழுதுவினைஞரும் [Works Clerk] கிராமோதயசபைச் செயலாளரும் பிரதேச சபைத் தலைவரும், நீர்ப்பாசன நலன்புரிச் சங்கத் தலைவரும், தாமரைக்குளம் துர்க்கை அம்மன் கோயில் தலைவரும் செம்மண்தீவு ''சன்றைஸ்'' கைப்பந்தாட்டக் குழுத்தலைவரும் ஆவார்.

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் 60ஆவது நாளை நினைவு கூருகின்றோம்.

எம்துயரில் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் அளித்த குழுக்கள், நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள் உட்பட சகல ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் அடம்பன் செம்மண்தீவு பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

நன்றி!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
[9050] உற்றார், உறவினர்கள்.

# மீனவருக்கான ஓய்வூதியம்; மார்ச் முதல் அமுலுக்கு வரும்

கொழும்பு, ஜன 23

புதிய நாடாளுமன்றத்தில் மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுச் சட்டமாக்கப்படும்.

மார்ச் மாதத்தில் இருந்து இத்திட்டம் அமுலுக்கு வந்துவிடும் என்று கடற்றொழில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சந்திரா நாணயக்கார தெரிவித்தார்.

இத்திட்டத்தில் சேரும் மீனவரின் அங்கத்துவ காலத்தைப் பொறுத்த விதத்தில் அவர்களது ஓய்வூதியத் தொகை அமையும்.

ஒரு மீனவர் 200 ரூபாவில் இருந்து 400 ரூபா வரை ஓய்வூதியமாகப் பெறுவர்.

18 வயதுக்கும், 59 வயதுக்கும் இடைப்பட்ட மீனவர் இந்த ஓய்வூதியத்திட்டத்தில் சேரமுடியும்

18 வயதான ஒரு மீனவர் மூன்றுமாதங்களுக்கு ஒருதடவை 65 ரூபாவை செலுத்தவேண்டும்.

அரசு 70 ரூபா 50 சதத்தை அவர் பெயரில் செலுத்தும் 59 வயதான ஒரு மீனவர் இத்திட்டத்தில் சேர விரும்பினால், அவர் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை 335 ரூபாவைச் செலுத்த வேண்டியிருக்கும். இவர் பெயரில் அரசு 412 ரூபாவை வைப்புச் செய்யும்.

இத்திட்டம் அங்கவீனர்களுக்கும், மரணமடைந்தவர்களுக்கும் உதவும் விதத்தில் உருவாக்கப்படும் இத் திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 25 ஆயிரம் மீனவர் வரையில் பயனடைவர். (ஒ-எ)

## ஜனாதிபதி தேர்தல்
# திருப்திகரமானது என்கிறது சார்க் கண்காணிப்புக் குழு

கொழும்பு ஜன 23

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சார்க் அமைப்பு நாடுகள் கண்காணிப்புக் குழு தனது இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது

தேர்தல் நடத்தப்பட்ட விதம் பொதுவாக திருப்தியளித்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

தாங்கள் பல வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று பார்த்ததில் அங்கு சட்டவரம்புகளுக்கு உட்பட்டு வாக்களிப்பு நடந்ததை அவதானித்ததாகவும்-

ஒருசில சம்பவங்களைத் தவிர தேர்தல் திருப்திகரமாகவே நடந்தது என்றும் — அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சார்க் நாடுகளைச் சேர்ந்த பத்து அங்கத்தவர்கள் இந்தத் தேர்தல் கண்காணிப்புக் குழுவில் அங்கம் வகித்தனர்.

## கட்டிமுடிந்து 3 ஆண்டுகளாகியும்
# செயல்படாத நிலையில் சுகாதார நிலையம்

மாங்குளம், ஜன. 23

முல்லைத்தீவு செல்வபுரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட சுகாதார நிலையம் இன்னமும் திறந்து வைக்கப்படவில்லை. இந்த நிலையத்துக்கு என மருத்துவமாது எவரும் நியமிக்கப்படவுமில்லை.

வீடமைப்பு அதிகார சபையின் நிதி உதவியுடன் முல்லைத்தீவு கிராமோதய சபையினால் இந்த நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டது.

இந்த நிலையம் இதுவரை இயங்க ஆரம்பிக்கவுள்ளது குறித்து முல்லைத்தீவு வீடமைப்பு அதிகார சபையின் செயலாளர் திரு. சு. பொன்னுச்சாமி, முல்லைத்தீவு அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலத்துக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்

இதையடுத்து மேற்படி சுகாதார நிலையத்துக்கு மருத்துவமாது ஒருவரை நியமித்து அதனைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி அரச அதிபர், முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியைக் கேட்டிருக்கிறார். (உ-94)

# மரபுக்கும் நவீனத்துக்கும் இடையில் பாலமாக திகழ்ந்தவர் இரசிகமணி
## நினைவு தின விழாவில் உரை

சுன்னாகம், ஜன. 23

'இரசிகமணி கனக செந்திநாதன் ஆழ்ந்த கருத்துள்ள சமய நூல்களையும் பழந்தமிழ் இலக்கியங்களையும் இரசிக்கும் அதே உளப்பாங்குடன், குழந்தைப் பாடல்களையும், சினிமாப்பத்திரிகைகள் — சினிமாப் பாடல்களையும் நயந்து சுவைத்துப் பாராட்டுபவர் அவர் மரபுக்கும் நவீனத்துக்கும் இடையில் ஒரு பண்பாட்டுப் பாலமாகத் திகழ்ந்தார்.

— இவ்வாறு யாழ் இலக்கிய வட்டத் தலைவர் செம்பியன் செல்வன் குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற இரசிகமணி நினைவுதின விழாவில் உரையாற்றிய போது குறிப்பிட்டார்

கலாகேசரி ஆ. தம்பித்துரை இவ்விழாவிற்குத் தலைமைவகித்தார்.

இந்த விழாவில் கே. டானியலின் 'கண்ணீர்', செங்கை ஆழியானின் 'தீம் தரிகிட தித்தோம்' ஆகிய நாவல்களின் விமாசன அரங்கு இடம்பெற்றது

கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் தலைமை வகித்த விமர்சன அரங்கில கலாநிதி அ. சண்முகதாஸ், செங்கை ஆழியான், திரு மு திருநாவுக்கரசு, மயிலங்கூடலூர் பி. நடராசன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்கள் (க 27)

## குடி தண்ணீர் பற்றாக்குறை

பருவமழை சரியாகப் பெய்யாததால் காரை நகரப் பகுதியில் இப்போதே குடிதண்ணீருக்குப் பற்றாக் குறை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வரட்சி நிலையும் எதிர்நோக்கப்படுகிறது.

நீர்ப்பற்றாக்குறையால் விவசாயச்செய்கை; கால்நடை வளர்ப்பு ஆகியவையும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

## முதலாம் வருட நினைவஞ்சலி



### திரு. செ. பாக்கியநாதன்

தோற்றம் ;
27-07-1933

மறைவு :
23-01-1988

எம்மை எல்லாம் ஆருத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! இறைவன் திருவடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களினால் அஞ்சலியைச் செலுத்துகிறோம்

'வாழ்வகம்'
சேந்தான்குளம் :
இளவாலை

துயருறும் :
மனைவி, மக்கள்
[9252]

## கடிதம் எழுதும் போட்டி

காரைநகர் ஜன 23

காரைநகர் அஞ்சல் ஒன்றியம், யுனெஸ்கோ நிறுவனத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களிடையே சர்வதேச கடிதம் எழுத்துப் போட்டி ஒன்றை நடத்துகின்றது.

இப்போட்டியில் முதல் ஐந்து இடங்களைப் பெறுகின்ற கடிதங்களுக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப்படும்.

முதலிடத்தைப் பெறும் கடிதத்தை எழுதியவருக்கு சுற்றுலாவின் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

'இயற்கைச் சூழலினை பாதுகாத்தல்' என்றதலைப்பில் கடிதம் எழுதும்படி போட்டியாளர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

போட்டியாளர்கள் 15 வயதுக்குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் (உ-144)

## யாழ் செஞ்சிலுவை சங்கத்துக்கு புதிய அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு புதிய அம்புலன்ஸ் வண்டி ஒன்று கிடைக்கவுள்ளது.

ஜப்பானில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினால் இந்த அம்புலன்ஸ் வண்டி அனுப்பப்பட்டுள்ளதாகவும்தற்போது கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஓ 10)

## விடுதலையானோருக்கு நன்கொடை

மாங்குளம், ஜன 23

பூஸா முகாமிலிருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 13 இளைஞர்களுக்கு தலா 2 ஆயிரத்து 400 ரூபா வீதம் நன்கொடை வழங்கப்பட்டது

மாங்குளம் சத்தோலிக்க தேவாலய வணபிதா திரு இராசநாயகம் இதனை வழங்கினார்.

## எழுது வினைஞர்கள்
# போட்டிப்பரீட்சை பெப். 11இல்

உள்ளூராட்சி சேவை கனிஷ்ட பிரிவின் இரண்டாந்தர எழுதுவினைஞர்களை, தட்டெழுத்தாளர் சேவையின் இரண்டாம் பிரிவுக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி கொழும்பு, கண்டி, அனுராதபுரம் ஆகிய இடங்களில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

# பிறந்த நாள் வாழ்த்து

செல்வப் புதல்வன்
### துரேந்திரா துரைராஜசிங்கம்

சித்தங்கேணியைச் சேர்ந்த Dr துரைராஜசிங்கம் கனகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் துரேந்திரா முதலாவது பிறந்த நாளைத் தனது இல்லத்தில் (23-1-89) இன்று குதூகலமாகக் கொண்டாகின்றார். இவரை டடா, மம்மி, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமன்மார், அத்தைமார், ஜெர்மன் மாமா குடும்பத்தினர், ஜெர்மன் சின்னமாமா, அன்ரா, ராஜா அத்தை, ரஞ்சி அத்தை, யோகாமாமா, மச்சாள்மார், அத்தான் அனைவரும் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[9255]


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை பெறுவதற்கான

★ கம்பியூட்டர் கல்வி ★

Computer Programming and Data Processing in Basic Language

ஆரம்பம்: 28-1-89 பயிற்சிக்காலம்: 2 1/2 மாதம்

கட்டணம்: 950/- [இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்]

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப்பயிற்சி I B M [Compatible] கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்

விண்ணப்ப முடிவு நாள்: 27 - 1 - 89

UNIKCO COMPUTER CENTRE
No. 5, POWER HOUSE ROAD,
2nd Lane JAFFNA
(Near Sub - Post Office) [C-1524]



RALEIGH

லிசோ என்ரபிறைசஸ் (பிறைவேட்) லிமிட்.

இலங்கையில் Raleighயின் ஏக விநியோகஸ்தர்கள்.

- வட மாகாணத்தில் -

ஒவ்பீஸ் இக்குயூப்மென்ட் லிமிட்.
(Office Equipment Ltd.)
இல. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகரா சந்திக்கு அருகாமையில்)

என்னும் நிறுவனத்தைத் தங்கள் ஏக விநியோகஸ்தர்களாக நியமித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறார்கள்.

✶ RALEIGH BICYCLE ✶

✶ கரம் நிபுணத்துவத்தின் சிறந்த பெயர்
✶ உலகம் பூராவும் நம்பிக்கையான பெயர்
✶ சிறந்ததைச் செய்யும் ஒரே சைக்கிள்

சகல அம்சங்களிலும் சம்பியனாகத் திகழும் சைக்கிள்: -

GRAND CHAMPION BICYCLES
(SPORTS & GENTS)

இவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே Office Equipment Ltd. இன் புதிய காட்சியறைக்கு விரையுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:

லிசோ என்ரபிறைசஸ் (பிறைவேற்) லிமிட்.
பொது களஞ்சியப் பொருள் வர்த்தகர்கள்
(கொழும்புக் கச்சேரிக்கு எதிரில்)
133 & 133 1/4, டாம் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி: 32161
(C/1546)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்ட உள்ளூராட்சி அமைப்புகள் மீள் பாகுபாடு செய்யப்பட வேண்டும்

## வளர்ச்சிக்கு வழிகோல இது முக்கியம்

பேராசிரியர் எஸ். பாலசுந்தரம்பிள்ளை
யாழ் பல்கலைக்கழகம்

1981 ஆம் ஆண்டு மாவட்டசபை உருவாகுவதற்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு மாநகர சபையும், மூன்று நகர சபைகளும் எட்டு பட்டண சபைகளும் 38 கிராமசபைகளும் இருந்தன.

மாவட்டத்தில் மொத்தமாக ஐம்பது உள்ளூராட்சிமன்ற பிரிவுகள் இருந்தன. யாழ்ப்பாண மாநகரசபை ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 224 மக்களைக் கொண்டிருந்தது. மிகச்சிறிய உள்ளூராட்சிப் பிரிவான எழுவைதீவுக் கிராமசபை 410 மக்களைக் கொண்டிருந்தது.

இம் மாவட்டத்தில் 1981 இல் மாவட்ட சபைக்கு முன்பு இருந்த உள்ளூராட்சிமன்றப் பிரிவுகள் பின்வருமாறு:

**மாநகரசபை**

★ யாழ்ப்பாணம்

**நகரசபை**

★ பருத்தித்துறை
★ வல்வெட்டித்துறை
★ சாவகச்சேரி.

**பட்டணசபை**

★ ஊர்காவற்றுறை.
★ சங்கானை.
★ சுன்னாகம்.
★ காங்கேசன் துறை.
★ நெல்லியடி.
★ பண்டத்தரிப்பு
★ உரும்பராய்.
★ மானிப்பாய்

**கிராமசபைகள்**

★ நெடுந்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவதீவு, வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு, காரைதீவு வடக்கு, காரைதீவு தெற்கு, நல்லூர், கொக்குவில், மாட்டிபாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி, பண்டத்தரிப்பு, ஏழாலை, தெல்லிப்பளை, மல்லாகம், மைலிட்டி, அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய் கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, மிருசுவில், கச்சாய், வரணி, உடுப்பிட்டி, கட்டைவேலி, புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று, முள்ளிப்பற்று (பகுதி)

மாநகரசபை, நகர சபைகள் தவிர பட்டண சபைகள், கிராம சபைகளில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை நிதி நிலைமை குறைவாக இருந்ததால் சிறப்பாக இயங்கவில்லை எனினும் உள்ளூர் மட்டத்தில் ஒரு சில சேவைகளையாவது சிறப்பாக ஆற்றினவென்றே சொல்லலாம்.

சிறு வீதிப் பராமரிப்பு சந்தை, மின்சாரம், குடிநீர் வழங்கல், சுகாதாரம், நூல் நிலையம் நடத்தல் போன்ற சேவைகளை பல உள்ளூராட்சி நிறுவனங்கள் சிறப்பாகச் செய்து வந்தன. மேலும் கிராமத் தலைமைத்துவ வளர்ச்சிக்கு கிராம சபைகள் பெரும் பங்காற்றின

1950 களிலும் 1960 களிலும் உள்ளூராட்சி அமைப்புகள் சிறப்பாக இடம் பெற்றன.

1970 க்குப் பின்னர் உள்ளூராட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெறாததால் பல சபைகள் கலைக்கப்பட்டு விசேஷ அதிகாரிகளின் கீழ் செயல்பட்டன. மேலும் பல சபைகளின் காலம் நீடிக்கப்பட்டது.

1978 இல் மாநகர சபை, நகரசபைகளுக்கும் மாத்திரமே தேர்தல் நடைபெற்றது. அரசாங்கம் இவ்விரு பெரிய நகரச்சார்பு உள்ளூராட்சி அமைப்புகளையே தொடர்ந்து செயல்படவைத்தது. பட்டினசபைகள், கிராமசபைகள் உள்ளடக்கிய பரப்புகளில் புதிய உள்ளூராட்சி அமைப்பை உருவாக்க விரும்பியது.

1981 ஆம் ஆண்டு மாவட்டசபை அமைக்கப்பட்ட பொழுது பட்டினசபை, கிராமசபை முறைகள் ஒழிக்கப்பட்டு இவ்விரு சபைகளின் கீழிருந்த பகுதிகள் மாவட்ட அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டன மாவட்ட சபைகள் செயற்படத் தொடங்கி சிறிது காலத்திற்குள் நிதி, அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களில் பிரச்சினைகள் தலைதூக்கிச் சிறிது காலத்துள் இச்சபைகளின் செயற்பாடுகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் செயலிழந்தன.

மேலும், 1983 ஆம் ஆண்டு ஜூலைக்குப் பின்னர் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி நாடாளுமன்ற ஆசனங்களை இழந்ததாலும் மாவட்டசபை நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியதாலும், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயற்பாடுகள் முடக்கப்பட்டன.

மாவட்டசபை அமைக்கப்பட்ட பின்னர் பழைய பட்டினசபை கிராமசபைகள் ஆகியன மாவட்ட சபையின் உப காரியாலயங்களாகச் செயல்பட்டன மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பின் கீழ் பட்டினசபை, கிராம சபை முறைகள் இல்லாமல் செயல்பட்டது தவறு எனப் பின்னர் உணரப்பட்டது. அதே நேரத்தில் ஏற்கனவே இருந்த பட்டின சபைகள். சிறியனவாகவும் போதிய வருமானமில்லாது திறம்பட இயங்க முடியாததாகவும் இருந்ததால் மாநகர சபை, நகரசபைக்கு அடுத்து இயங்கு தன்மை கொண்ட மூன்றாவது உள்ளூராட்சி அமைப்பொன்றை நிறுவ அரசு தீர்மானித்தது. இதன்படி ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமுள்ள நகரப்பகுதிகளைத் தவிர்ந்தபிரதேசத்துக்கு ஒன்று அல்லது சில இடங்களில் இரண்டு பிரதேச சபைகள் அமைக்கப்பட்டன

இச்சபைகள் ஒப்பீட்டு ரீதியில் முன்னைய கிராம, பட்டின சபைகளிலும் பார்க்கப் பெரியளவு பரப்புகளையும் குடிசனத் தொகையையும் கொண்டதாக இருக்கின்றன. இதனால் இச்சபைகள் சிறப்பாக இயங்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது

யாழ்ப்பாண மாவட்டத்தில் 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுள் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவு முழுமையாக யாழ்ப்பாண நகரப் பகுதிக்குள் அடங்குகின்றது. ஏனைய 12 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுள் 12 பிரதேச சபைகள் அமைக்கப்பட்டுள்ளன. வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு புதியதொரு பிரதேச சபை அமைக்கப் படவிருக்கிறது.

பிரதேச சபைகளின் பெயரும் இச்சபைகள் கொண்டுள்ள குடிசனத்தொகையும் அங்கத்தவர் எண்ணிக்கையும் பின்வருமாறு:

**யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச சபைகள்**

| பெயர் | குடிசனத்தொகை | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|
| சாவகச்சேரி | 51,836 | 15 |
| நெடுந்தீவு | 5,608 | 9 |
| ஊர்காவற்றுறை | 37,583 | 11 |
| நல்லூர் | 41,376 | 12 |
| பருத்தித்துறை | 48,150 | 09 |
| வடமராட்சி தெற்கும் மேற்கும் | 54,117 | 18 |
| வலிகாமம் கிழக்கு | 73,133 | 21 |
| வலிகாமம் வடக்கு | 72,448 | 21 |
| வலிகாமம் தெற்கு | 54,762 | 16 |
| வலிகாமம் தெ. மேற்கு | 56,657 | 16 |
| வலிகாமம் மேற்கு | 47,620 | 14 |
| வேலணை | 38,411 | 11 |

பிரதேச சபைகளின் பெயர்கள் எல்லாம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் பெயர்களை ஒத்தனவாக இல்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிப் பிரதேசங்கள் சரியான முறையில் எல்லை நிர்ணயிக்கப்படாததால், சில பிரதேசங்கள் அளவில் பெரியதாகவும் வேறு பட்ட பகுதிகளை உள்ளடக்கியதாகவும் இருப்பதால் இவை அபிவிருத்தி முயற்சிகளுக்குத் தடையாக இருக்கின்றன.

இதனால் உள்ளூராட்சி அலகுகளின் பரப்புகள் மீள்பாகுபாடு செய்யப்படவேண்டும். இப் பாகுபாடு சமூக - பொருளாதாரப் பண்புகள், நிலப் பயன்பாடு, போக்குவரத்து மற்றும் அவ்வப்பிரதேச மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்

யாழ்ப்பாண மாநகர சபையினதும், சாவகச்சேரி, பருத்தித்துறை வல்வெட்டித்துறை ஆகிய நகரசபைகளினதும் பரப்பளவுகளும் மீள்பாகுபாடு செய்யப்படவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டக்கின் உள்ளூராட்சிப் பிரிவுகள் பின்வருமாறு அமைக்கப்படின் இது இம் மாவட்டத்தின் பிரதேச உள்ளூராட்சி அபிவிருத்திகளுக்குரிய உதவியாகஇருக்கும். 1) யாழ்ப்பாண மாநகரசபை 2) பருத்தித்துறைநகர சபை 3) சாவகச்சேரி நகரசபை 4) வல்வெட்டித்துறை நகரசபை 5) சங்கானை நகரசபை 6) மானிப்பாய் நகரசபை 7) சுன்னாகம் நகரசபை 8) காங்கேசன்துறை நகரசபை 9) நெல்லியடி நகரசபை 10) நெடுந்தீவு பிரதேசசபை 11) புங்குடுதீவு - நயினாதீவு பிரதேசசபை 12) வேலணை பிரதேசசபை 13) ஊர்காவற்றுறைப் பிரதேச சபை 14) காரைதீவு பிரதேசசபை 15) வட்டுக்கோட்டை பிரதேசசபை 16) பண்டத்தரிப்பு பிரதேசசபை 17) தெல்லிப்பளை பிரதேசசபை 18) உரும்பிராய்பிரதேச சபை 19 கோப்பாய் பிரதேசசபை 20) அச்சுவேலி பிரதேசசபை 21) தென்மராட்சி மேற்குப் பிரதேசசபை 22) தென்மராட்சிகிழக்குப்பிரதேச சபை 23) உடுப்பிட்டி பிரதேசசபை 24) வடமராட்சி கிழக்குப்பிர தேசசபை என்பனவாகும்.

இதனால் மாவட்டத்தில் தற்பொழுதுள்ள உள்ளூராட்சி அலகுகளிலும் பார்க்க 8 அலகுகள் கூடுதலாக அமையும் யாழ்ப்பாண மாநகர சபைப்பகுதி, யாழ்ப்பாணம், நல்லூர், அடங்கும் பெரிய யாழ்ப்பாணப் பகுதியை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். ஏனைய எட்டு நகரசபைப் பகுதிகள் இப்பொழுது கொண்டிருக்கும் நிர்வாகப் பிரதேசத்திலும் பார்க்க அவைகளின் அயல் பகுதிகளையும் உள்ளடக்கிய பெரிய நகரப் பகுதிகளாக அமைய வேண்டும். ஏனைய 15 அலகுகள் பிரதேசசபைகளாக அமையும்.

மாவட்டத்தின் உள்ளூராட்சி அலகுகள் மேற்காட்டிய முறையில் மீள்பாகுபாடு செய்யப்படுமாயின். அது உள்ளூராட்சிச் சேவைகளை நல்ல முறையில் விஸ்தரிக்கவும், உள்ளூர் மட்டத்தில் திட்டவட்ட பௌதிக வளர்ச்சியை மேற்கொள்ளவும் வழி வகுக்கும் முன்வைக்கப்பட்ட உள்ளூராட்சி அலகுகள் புவியியல், சமூக பொருளாதார சுட்டிகளைக் கருத்திற் கொண்டதால் ஒவ்வொன்றும் ஒத்த பல பண்புகளைக் கொண்டு காணப்படுகின்றன. இதனால் இவை சிறப்பாக இயங்குமென எதிர்பார்க்கலாம். ★

# இயற்கை மனிதனுக்கு விடுத்திருக்கும் முதல் சவால் 'எயிட்ஸ்' நோய்

## புத்தக வெளியீட்டுவிழாவில் 'நந்தி' உரை

பருத்தித்துறை ஜன 23

காலத்துக்குக் காலம் இயற்கை மனிதனுக்குச் சவால் விட்டுக்கொண்டு வருகின்றது.

புது வைத்திய முறைகளை, தடுப்பு மருந்துகளைக் கண்டு பிடிக்கக் கண்டுபிடிக்க புதப்புது நோய்களும் உருவாகின்றன. இத்தகைய புதிய நோயேஎயிட்ஸ்

இந்நோய் எமது எதிர்ப்புச் சக்தியை நீக்கி விடுவதால் ஒரு தடிமலினால் கூட மரணம் நிகழ வாய்ப்பு ஏற்பட்டு வருகிறது. இது இயற்கை மனிதனுக்கு விடுத்த முதற் 'சவால்'.

வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற டாக்டர் எம். கே. முருகானந்தனின் ''தாயாகப் போகும் உங்களுக்கு'', ''எயிட்ஸ்'' நூல்களின் வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக பொது சுகாதாரப் பீடத் தலைவர் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) இப்படிக் கூறினார்.

பட்டயக் கணக்காளர் திரு: ஏ. சோமசுந்தரம் பின்னை ''தாயாகப் போகும் உங்களுக்கு'' என்ற நூலின் முதற் பிரதியையும், சட்டத்தரணி எம். கே. முத்துக்குமாரு ''எயிட்ஸ்'' என்ற நூலின் முதற் பிரதியையும் பெற்றுக் கொண்டனர்.

டாக்டர் கே. சுகுமார் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை. வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி திலகவதி பெரியதம்பி. ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம், யாழ் தொழிற்திணைக்கள உதவி ஆணையாளர் திரு எஸ் சிவப்பிரகாசம். வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ் சுப்பிரமணியம். பருத்தித்துறை இலங்கைவங்கி முகாமையாளர் திரு எஸ. மாலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றிநிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர். திரு. தெணியான் வரவேற்புரை நிகழ்த்தினர்.

பேராசிரியர் நந்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஒரு காலம் பெரியம்மை எவ்வாறு உலகத்தை ஆட்டிப் படைத்ததோ அதே போல இன்று எயிட்ஸ் உலகத்தை ஆட்டிப் படைக்கிறது! உலகத்தை அழித்து வருகின்றது. உலகத்துக்கு சவால் விடுகின்றது

பெரியம்மையை விட இது ஒரு கொடிய நோய். பெரியம்மையைக் குணப்படுத்துவதற்கு வைக்சீன் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. ஆனல் எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த எந்த மருந்தும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை

ஆனல் எமது பழக்க வழக்கத்தினால் இந் நோயை ஓரளவு தடுக்க முடியும்

ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை ஒழுக்கத்துடன் கடைப்பிடித்தால் இந்நோய் பரவுவதைபெரும்பாலும் தடுத்துவிட முடியும்

அடுத்து கருத்துரை வழங்கிய பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்: ஆனந்தராசா கூறியதாவது:-

பாலியல் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டுமென பலரும் எண்ணும் இக்கால சட்டத்தில் எயிட்ஸ் என்னும் இந்நூல் வெளியாவது வரவேற்கத்தக்கது, இந்நூலை இளைய சமுதாயமும படித்துப் பயன் பெறவேண்டும்.

எமது பகுதிகளில் எயிட்ஸ் நோய் பரவுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை ஏனெனில் இங்கு பாலியல் தொடர்பான கெட்ட நடத்தைகள் அதிகளவு இல்லை என்றார்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. லலித்குமார், யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம், ஆசிரியை திருமதி அம்மன்கிளி முருகதாஸ், திரு. இரா. சந்திரசேகரன் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோரும் நிகழ்ச்சியில் உரையாற்றினர்

நூலாசிரியர், டாக்டர் எம் கே. முருகானந்தன் பதிலுரை வழங்கினர்.

யதார்த்தா கலை இலக்கிய வட்டச் செயலாளர் திரு ஏ என் எஸ். திருச்செல்வம் நன்றியுரை நிகழ்த்தினர்.

## வைத்திய ஆலோசனை

நாட்பட்ட வாதம், நரம்புத் தளர்ச்சி, செங்கமாரி, சிரங்கு, அல்சர் (குடற்புண்) மேகரோகங்கள், வெள்ளை படுதல், பெரும்பாடு, குழந்தைகள், சிறுவர் மற்றும் ஏனைய சகல ரோகங்களுக்கும் ஆலோசனையும், சிகிச்சையும் வழங்கப்படும்

"ராஜ் வைத்திய நிலையம்"
சென் பற்றிக்ஸ் வீதி,
லீனஸ் கட்டட மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(9253)

## பாலர் வகுப்பு ஆசிரியர் பயிற்சி

(PRE SCHOOL TEACHER TRAINING)

க. பொ. த (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் இப்பயிற்சி நெறியிற் சேரலாம்

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப் படும்.

பல்கலைக்கழக ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்கள் பகுதி நேர விரிவுரைகளை நடத்துவார்கள்.

மாணவர்களுக்கு விடுதி வசதிகளுண்டு

பயில விரும்பும் மாணவிகள் 27-01-89க்கு முன்னர் கிழமை நாட்களில் அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்தல் வேண்டும்

இயக்குநர்
தொடர் கல்விப் பிரிவு

உடுவில் மகளிர் கல்லூரி,
உடுவில்.

(C/1535)

## வாசகர் திருமுகம்

### குப்பை கூளங்களால் காக்கைதீவு நாறுகிறது

யாழ்ப்பாணம் காக்கைதீவுக்கும், பொம்மைவெளிக்கும் இடையிலுள்ள பகுதியில் அழுக்குப் பொருள்களும் குப்பைகளும் கொட்டப்படுவதால் கல்லுண்டாய் பாதையைப் பயன்படுத்திப் பயணம் செய்வோர் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

இந்த இடத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபை வாகனங்கள் குப்பைகளைக் கொண்டுவந்து கொட்டிக் குவிக்கின்றன.

தனிப்பட்ட ஆட்களும் செத்த மாடுகள், செத்த நாய்கள் ஆகியவற்றைப் போடுகிறார்கள். ஆடு, மாடுகளின் எலும்புகளையும் கொண்டுவந்து கொட்டி விடுகின்றார்கள்.

இந்தக் குப்பை கூளங்கள் வீதிக்குத் தூரமாகக் கூடக் கொட்டப்படுவதில்லை. வீதியின் இரு மருங்கிலும் கொட்டப்படுகின்றன. இதனால் இவ் வழியே போகும் பாதசாரிகளும் சைக்கிளில் செல்வோரும் வாகனங்களில் செல்வோரும் மூச்சை அடக்கிக் கொண்டு செல்லவேண்டியிருக்கிறது. இந்த இடத்தில் எழும் துர்நாற்றத்தைச் சகிக்கமுடியாது குமட்டல் வந்து வாந்தி எடுப்பவர்களும் உண்டு.

ஒரு பிரதான போக்குவரத்துப் பாதையான கல்லுண்டாய்ப் பாதையை அருவருப்புக்குரியதாக்கச் செய்யும் முறையில் அமைந்துள்ள இந்த குப்பை கொட்டும் செயலை ஒரு சமூகவிரோதச் செயல் என்று வருணிக்கலாம்

இதனை மேற்பார்வை பார்க்கவேண்டிய யாழ் மாநகரசபையும் இந்த அழுக்காக்கும் வேலையில் ஈடுபடுவது மிகவும் விசனத்துக்குரியது. மக்கள் நலனில் அக்கறை கொண்டு, மாநகரசபை திட்டமிட்ட முறையில் நகரக் குப்பைகளை வெளியேற்றவும் கல்லுண்டாய் வீதியின் இன்றைய அவல நிலையைச் சீர் செய்யவும் முன்வரவேண்டும்.

இங்ஙனம்
தொல்புரம், நா: இராஜகுரு

### வடபகுதியில் உள்ள தொழிற்சாலைகளின் நிலைமை

வட பகுதித் தமிழ் மக்களின் பொருளாதாரம் நாளுக்கு நாள் கீழ் நோக்கிச் செல்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன் வடபகுதியிலிருந்து மரக்கறி, வெற்றிலை முதலிய பொருள்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மாலை தீவு மற்றும் ஆசிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன

அத்துடன் வடபகுதி உற்பத்திப் பொருள்கள் தென்னிலங்கையில் அதிகமாக விற்கப்பட்டன. வடபகுதியில் உற்பத்தியான இனிப்பு வகைகள் இலங்கை முழுவதிலுமே 60 சத வீதத்துக்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

ஆனல் வடபகுதியில் நடந்த கலவரங்களினால் வெளிநாட்டு ஏற்றுமதியோ, தென் பகுதிக்கு அனுப்புதலோ எல்லாம் அற்றுப்போயுள்ளன. அந்த இனிப்புத் தொழிற்சாலைகள் இயங்கவில்லை. அவை தாம்முன் கொண்டிருந்த விற்பனைத் தளத்தை இழந்தன.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரங்களினால் தென்னிலங்கையில பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு றெப்பியா மூலமாகத் தேவையான பண உதவியைக் கொடுத்து அவற்றைத் திரும்பவும் இயக்குவித்தார்கள்

ஆனல் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு இதுவரை எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படவில்லை. அவற்றுக்கு வங்கிகளும் கடன் உதவியை நிறுத்தி உள்ளன.

அரசாங்கம் வங்கிகள் மூலம் சிறு கைத்தொழில்களுக்கும் நடுத்தர கைத்தொழில்களுக்கும் வழங்கும் பணமும் இந்தத் தொழிற்சாலைகளுக்குக் கிடைப்பதில்லை மின்சாரத் துண்டிப்புகளினாலும் வட இலங்கைத் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டன. மேற்கூறிய காரணங்களால் வட இலங்கையிலுள்ள எத்தனையோ தொழிற்சாலைகள் மூடப்படும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது

வட இலங்கைத் தொழிற்சாலைகளின் பிரச்சினைகளை ஆய்வு செய்து அவற்றுக்குப் பரிகாரம் காண அறிவுடையோர் முன்வர வேண்டும்.

எஸ். தவேந்திரன்
யாழ்ப்பாணம் வீதி,
மானிப்பாய்

## இராமநாதன் கல்லூரி

பவள விழாச் சிறப்புமலர்

மேற்படி விழாவினை ஒட்டி வெளிவர இருக்கும் சிறப்புமலரில் அனைத்துப் பழைய மாணவிகளின் பட்டியல் ஒன்றினைச் சேர்க்க உத்தேசித்துள்ளோம். எனவே பழைய மாணவிகள் தங்கள் பெயர், பதவி, முகவரி ஆகியவற்றை 4-2-89 க்கு முன்னர் தந்துதவுக.

[9043] 20-01-89 அதிபர்.

## BOOK SALE

Valuable second hand books for sale, on 24 & 25 January, 1989.

No. 10. Crossette Lane
(Kachcheri-Nallur Road)
Chundikuli, Jaffna.

(C/1543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளிநாட்டு உதவியுடன்
# மன்னார், திருகோணமலை ஆஸ்பத்திரிகள் சீரமைப்பு

திருகோணமலை ஜன 23

திருகோணமலை, மன்னார் ஆஸ்பத்திரிகள் வெளிநாட்டு உதவியுடன் சீரமைக்கப்படும். —சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த வாரம் திருகோணமலையில் இடம் பெற்ற அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள், மற்றும் மாகாண அமைச்சர்கள், மத்திய அரசு அமைச்சர்கள், திரு. பெஸ்டஸ் பெரேரா, திரு. அலுக் அலுவிஹார, கலாநிதி டபிள்யூ. தகநாயக்கா, திரு. ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சுகாதார அமைச்சர் திரு. ரஞ்சித் அத்தபத்து பேசுகையில்—

மன்னார் ஆஸ்பத்திரி சுவிட்ஸர்லாந்து அரசின் உதவியுடனும்—

திருகோணமலை ஆஸ்பத்திரி இத்தாலி அரசாங்கத்தின் உதவியுடனும் சீரமைக்கப்படும்.

இவை இரண்டும் ஒவ்வொன்றும் 300 படுக்கைகளைக் கொண்ட நவீன ஆஸ்பத்திரிகளாக மாற்றப்படும்.

மன்னாரில் சீரமைப்பு வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன.

திருகோணமலைக்கு இத்தாலி அரசின் பிரதிநிதிகள் பெப்ரவரி மாதத்தில் வருகை தருவர்.

வடக்கு, கிழக்கு மாகாண ஆஸ்பத்திரிகளுக்கு மேலும் பல அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படும்—என்றார்.

மீன்பிடி தகவல்துறை அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா உரையாற்றுகையில்,

யாழ். மட்டக்களப்பு மீன்பிடிப் பாடசாலைகளை புனரமைத்து மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

இப் பாடசாலைகளின் புனரமைப்பிற்காக வெளிநாடுகளிலிருந்து ஒரு கோடி 40 லட்சம் ரூபா பெறப்பட்டிருக்கிறது

வடக்கு, கிழக்கிலுள்ள ஐஸ் தொழிற்சாலைகளையும் மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மீனவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் மாகாணசபையிடம் ஒப்படைக்கப்படும் — என்றார்.

வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் புனரமைப்பதற்கு 4 கோடி 90 லட்சம் ரூபா வழங்கப்பட இருப்பதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கலாநிதி டபிள்யூ தகநாயக்கா சொன்னார்.

இக்கட்டான காலகட்டத்தில் இந்தச் சங்கங்கள் சிறப்பாக இயங்கின.

இச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஒரு மாத கடன் சலுகையை இரண்டு மாதங்களாக நீடிக்கவுள்ளேன் —

என்றும் அவர் சொன்னார்.

மாகாண புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து 50 கோடி டாலர் பெறப்பட்டிருப்பதாக புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திரு. அலுவிஹார தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் கேட்டுக் கொண்டபடி மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உடனடியாக வரட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சமூக சேவைகள் அமைச்சர் திரு. ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.

(உ-150)

# ஆங்கிலம், கம்பியூட்டர் அறிவு மாணவருக்கு அவசியம்
### பேராயர் வலியுறுத்து

பண்டத்தரிப்பு, ஜன 23

வாழ்க்கையில் முன்னேற்றம் காண ஆங்கில அறிவாற்றலும், கம்பியூட்டர் கல்வியும் இன்று மிக வேண்டப்படுகின்றன.

வங்கிகள், அலுவலகங்கள் கம்பியூட்டர் மயமாகின்றன. பாடபோதனையோடு கம்பியூட்டர்பாவனைத்திறமையையும் பாடசாலைகள் மாணவர்களுக்கு வழங்க வேண்டும்

வட்டுக்கோட்டையில் நடந்த ஞான ஒடுக்கத்தின் போது தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அருட்திரு. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஆங்கிலம் உலக மொழி: தொடர்புப் பொது மொழி எனவே ஆங்கில ஆளுமையை மாணவர்கள் பெறக் கூடியதாக பாடசாலைகள் திட்டமிட்டு போதனைகளை நடத்த வேண்டும்-

என்று அவர் மேலும் கூறினார்

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி செல்லையாவும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார் (க- 120)

### மாதிரி வீடுகள் அமைப்பு

கோப்பாய் ஜன 23

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐக்கிய நாடுகள் புனர் வாழ்வு ஸ்தானிகராலயத்தினால் இரண்டு மாதிரி வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இவ் வீடுகளில் ஒன்று கோப்பாய் வடக்கிலும் மற்றது உரும்பராயிலும் அமைக்கப்பட்டுவருகின்றன. (ச- 72)

### இரண்டாம் இடம்

பச்சிலைப்பள்ளி ஜன 23

அண்மையில் வெளியாகிய ஆறும் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி பளை மகாவித்தியாலய மாணவன் த. தயானந்தன் 171 புள்ளிகள் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதாகவும் அத்துடன் மேலும் ஏழு மாணவர்கள் புலமை பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளதாகவும் அதிபர் அ. பொ. செல்லையா தெரிவித்தார்.

(க- -117)

### கூட்டம்

சாவகச்சேரி ஜன 23

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அபிவிருத்திச்சங்கவருடாந்தப்பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை கொத்தணி அதிபர் திரு. ஆ. செல்லையா தலைமையில் நடைபெறும். (க-31)

# மருந்து என நினைத்து பெற்ரேல் அருந்தியவர் பலி!

மருந்து என நினைத்து பெற்ரோல் அருந்திய வயோதிபர் மரணமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை கரவெட்டி மத்தியபகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

க. கந்தப்பு (70 வயது) என்பவரே மருந்துக்குப் பதிலாக அதனருகில் இருந்த பெற்ரோலை எடுத்துக் குடித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமைகாலை மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் அன்றிரவு 9 மணியளவில் மரணமடைந்தார். (உ-70)

### போக்குவரத்து இடைஞ்சல்

கோப்பாய் ஜன 23

கோப்பாய் - கைதடி பாதையில் அமைந்திருக்கும் பாலம் சீர் செய்யப்பட்டு ஒருமாத காலத்துக்கு மேலாகியும் இன்னும் தான் போடப்படாது விடப்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதாகச்சுட்டிக்காட்டப்பட்டது. (க-72)


அராலி மாவத்தை விளையாட்டுக்கழகத்தின்

**நூறுவது ஆண்டு விழாவை**

முன்னிட்டு அராலி தெற்கு, கிழக்கு சன சமூக நிலையம் நடாத்தும்

யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களுக்கு இடையிலான மாபெரும் ஏழு பேர் கொண்ட விலக்கல் முறை (நொக்கவுட்)

**உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 1989**

பங்கு பற்ற விரும்பும் சன சமூக நிலையங்கள் 28-01-1989 சனிக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.

**பிரவேசக் கட்டணம்: ரூபா. 50/-**

தொடர்பு கொள்ளும் முகவரிகள்:-

நதியா - ஜுவலரி
ஸ்ரான்லி வீதிச் சந்தி,
இல 2. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்,
அராலி தெற்கு, கிழக்கு,
சன சமூக நிலையம்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(9052)



முதலாவது பிறந்ததினம்



**செல்வி தனரூபி**

நாச்சிமார் கோவிலடி இல. 1010/6, இல் வசிக்கும் நந்தகோபால் யோகலச்சுமி தம்பதிகளின் செல்வ மகள் தனரூபா இன்று 23-01-89 தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, ரூபி அக்கா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார், அன்ரிமார், சித்தப்பாமார், மட்டுவில் அத்தை. மாமா மற்றும் மாமி, வதனி மச்சாள், வாணி மச்சாள், மதி மச்சாள், மோகன் அண்ணா, அத்தைமார் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென நாச்சிஅம்பாளை வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

ரூபி ஜுவலறி
லச்சுமி வாசம்,
1010/6, K. K. S. ரோட்,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [9265]



# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

**ஷப்ரு அன்பளிப்புக் கலண்டர்கள்**

★ பெரியஅளவில் - மாதம் ஒரு பக்கம் கொண்ட மூவர்ணக் கலண்டர்!

★ ஜனவரி முதலாம் திகதிமுதல் விநியோகம்!!

★ வாடிக்கையாளர்கள் எமது யாழ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர் சபை**

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி,
(B. A. (Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

**SHABRA**

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073—24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

இலவென்னும் எவ்வநோய் நீக்கின்
 தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும்.

**பொருள்:**

ஒருவன் இரவு என்று சொல்லப்படும் துன்பநோயை நீக்கிவிட்டால் அஃது அவனுக்கு அழிவில்லாத நிலையான புகழைக் கொடுக்கும்.


# உதயன்

உண்மை - நிதானம் - நடுநிலைமை

இல. 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
23. 1. 1989 உ. வெ. இல 23


## இரண்டுவித நீதி வேண்டாம்

1983 ஆம் ஆண்டு ஜூலை வன்செயல்களின் போதும், அதன் பின்னர் அடிக்கடி ஏற்பட்ட வன்செயல்களின் போதும் கடமைக்குச் செல்லாதிருந்து வேலை இழந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் பதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கு இது வயிற்றில் பால் வார்க்கும் செய்தி. அவர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு வழங்க முடிவு செய்த அரசுக்கும், அதற்காகக் கடந்த ஐந்து வருடங்களாக அயராது உழைத்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் அவர்கள் நன்றி உடையவர்களாக இருப்பர்.

இடைப்பட்ட காலம் சம்பளமற்ற லீவாகக் கருதப்பட்டே மீண்டும் வேலை வழங்கப்படுகிறது. வேலை இழப்பதற்கு முந்திய இரண்டு வருடங்களிலும் பயன்படுத்தாத லீவுகளைக் கழித்து, மிகுதிக் காலமே சம்பளமற்ற லீவாகக் கருதப்படும் என்ற சலுகையும் வழங்கப்பட்டிருக்கிறது.

வன்செயல் காரணமாக கடமைக்குச் செல்லாதிருந்த ஆசிரியர்களில் பலரும், வெளி மாகாணங்களில் பணிபுரிந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். திருகோணமலைப் பகுதியில் தொடர்ந்து நடந்த வன்செயல்களால், இராணுவ நடவடிக்கைகளால், அப்பகுதிப் பாடசாலைகளுக்குச் செல்லாதிருந்தவர்களும் இந்த ரகத்தில் அடங்குவர்.

வன்செயல்கள் அவ்வப்போது தணிந்த வேளைகளில் கடமைக்குச் செல்லுமாறு அரசு ஆசிரியர்களைக் கேட்டிருந்தது. அதற்காகச் சில கால அவகாசங்களையும் வழங்கி இருந்தது. அரசு நிர்ணயித்த கால எல்லைக்குள் கடமைக்குத் திரும்பாதவர்களே வேலை இழந்தனர்.

இவர்களில் பலரும் தமது உயிருக்கு அஞ்சியே கடமைக்குச் செல்லாதிருந்தனர் என்பது தெரிந்த விடயம். ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் மிகப் பெரிய சொத்து உயிர். அதனைப் பாதுகாத்தால் தான் அவனுக்கு வாழ்க்கை உண்டு. அதனால் தான் மரணபயம் எல்லோருக்கும் உண்டு என்பர்.

அந்த வகையில், உயிருக்கு அஞ்சி கடமைக்குச் செல்லாதிருந்தவர்களின் பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் நோக்கி, அவர்களை வேலையிலிருந்து நீக்காது பணி செய்ய அரசு அனுமதித்திருக்கலாம்.

வேண்டுமென்றே தொழில் தேவையில்லை என்று கடமைக்குச் செல்லாமல் இருக்கக்கூடியவர்களாக ஒரு சிலரே இருந்திருப்பர். மிகுதிப்பேர் அனைவரும், தங்களால் அன்றிப் புறச்சூழலால் உருவாக்கப்பட்ட பயங்கர சூழ்நிலையால், தமது உயிருக்கு அஞ்சி, அதனைப் பாதுகாக்கும் நோக்குடன் பாடசாலை செல்லாதிருந்தவர்களே.

எனவே அவர்களுக்கு சிறிய அளவிலான சம்பள வெட்டுப் போன்ற தண்டனைகளை வழங்கி வேலையில் வைத்திருந்திருக்கலாம்.

வன்செயல்கள் ஓய்ந்த பின்னரும், பதற்றம் தணிந்த பின்னரும் மாணவர் கல்வியை மனதில் கொள்ளாமல், நீண்டலீவு எடுக்க நினைத்த ஆசிரியர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதற்கு மறுபக்கம் இருக்கமுடியாது. வேலைக்காக ஆளே அன்றி ஆளுக்காக வேலை அல்ல என்ற நிலையையும் அரசு கடைப்பிடித்தால் தான் நிர்வாகத்தில் ஒழுக்கக் கட்டுப்பாட்டை நிலைநாட்ட முடியும்.

எனினும் காலம் பிந்தியாவது, பாதிப்புற்ற ஆசிரியர்களுக்கு மன்னிப்பு வழங்கும் விதத்தில் மீண்டும் வேலை வழங்க எடுத்த முடிவு வரவேற்கப்பட வேண்டியதாகும்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட ஏனைய அரச ஊழியர்கள், தனியார் ஊழியர்களுக்கும் இவ்வாறான மன்னிப்பு அளித்து மீண்டும் வேலை வழங்கவேண்டும். ஆசிரியர்களுக்கு ஒரு நீதி, அடுத்தவர்களுக்கு இன்னொரு நீதி என்று ஆகிவிடக்கூடாது. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தனியார்துறையினர் என்பதால் அதில் அக்கறை செலுத்தாமல் இருந்துவிடவும் கூடாது.

ஒரு நாட்டின் பிரஜைகளை தொழில் ரீதியாகவோ அல்லது ஸ்தாபன ரீதியாகவோ அரசு பிரித்துப் பார்த்தல் உகந்ததல்ல; புறக்கணித்தலும் ஆகாது.

## தரமுயர்வு கிடையாது

புதுடில்லி, ஜன. 22

இஸ்ரவேலுடனான ராஜதந்திர உறவை தரமுயர்த்தப் போவது இல்லை என்று இந்தியா அறிவித்து இருக்கிறது.

புதுடில்லிக்கு விஜயம் செய்த அமெரிக்க காங்கிரஸ் வெளியுறவுக் கமிட்டித்தலைவர் ஸ்டீபன் சோலார்ஸ் வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவை சந்தித்தார்.

அப்போது அவரிடம் இதனை திரு. ராவ் தெரிவித்தார். (எ)

★ ஒரே வீச்சில் பறந்து சென்று

# இஸ்ரவேலைத் தாக்கக்கூடிய போர் விமானம்

## லிபியா தயாரிப்பதாக அமெரிக்கா தகவல்

வாஷிங்டன், ஜன. 22

வேகம் கூடிய புதிய ரக சண்டை விமானம் ஒன்றை லிபியா தயாரித்து வருவதாக அமெரிக்க அரசு நேற்றுக் குற்றஞ் சாட்டியது.

வானில் வைத்தே இன்னொரு விமானத்தில் இருந்து எரிபொருளை நிரப்பிக் கொண்டு செல்லக் கூடியதாக புதிய ரக சண்டை விமானம் அமைந்துள்ளதாக அமெரிக்கா மேலும் அறிவித்தது.

இஸ்ரவேலை நோக்கி ஒரே வீச்சில் செல்லக் கூடிய வல்லமையுள்ளதான இவ் விமானம் மேற்கு ஜேர்மன் நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்படுவதாகவும் ராஜாங்க அமைச்சு அறிவித்தது.

குறிப்பிட்ட மேற்கு ஜேர்மன் நிறுவனத்தின் பெயரை அமெரிக்கா வெளியிடவில்லை.

லிபியா தயாரித்து வரும் இப்புதிய ரக போர் விமானத்தினால் மத்திய கிழக்கு நிலைமை மோசமடையக் கூடும் என்று அமெரிக்கா எச்சரித்து இருக்கிறது.

இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவியுள்ளதாக லிபியா மீது அமெரிக்கா ஏற்கனவே குற்றஞ் சாட்டியதும், தாக்கவந்ததாகக் கூறி இரண்டு லிபியமிக் விமானங்களை அமெரிக்க எப்-16 சண்டை விமானங்கள் சுட்டுவீழ்த்தியதும் தெரிந்ததே.

### காஷ்மீர் பற்றி பாகிஸ்தான்

இஸ்லாமபாத், ஜன. 22

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் இந்தியாவுக்கு விட்டுக்கொடுக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று வெளியுறவு அமைச்சர் யாகுப்கான் தெரிவித்தார். (எ)

சீனாவில்

### பட்டாசுத் தொழிற்சாலையில் வெடிவிபத்து; 26 பேர் மரணம்

பீகிங், ஜன. 22

சீனாவில் பட்டாசு தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 26 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

நாட்டின் தென்பகுதியில் உள்ள கியூனன் நகரில் இத் தொழிற்சாலை இருந்தது.

15 தொன் வெடிமருந்தில் தீப்பிடித்துக் கொண்டதில் தொழிற்சாலை முற்றாகச் சேதமடைந்தது.

அடுத்த மாதம் வரும் வசந்த விழாவுக்குத் தேவையான பட்டாசுகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த போதே இவ்விபத்தி ஏற்பட்டது.

### சர்வாதிகாரம் மறைகிறது புதிய அதிபர் புஷ் பேச்சு!

வாஷிங்டன், ஜன. 22

உலகில் இருந்து சர்வாதிகார ஆட்சி முறை வெளியேறிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது அங்குரார்ப்பண உரையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

எனது ஆட்சி புதிய பாதையில் செல்லும்.

உலகின் செல்வந்த நாடாக அமெரிக்காவை என்றும் வைத்திருப்போம்.

சுதந்திர உணர்வுக்கு உலகில் புத்துயிர் அளிக்கப்பட்டது. அந்த உணர்வு வளர அமெரிக்கா தொடர்ந்து பாடுபடும். இப்படி அதிபர் புஷ் தெரிவித்தார்.

பதவி விலகிய அதிபர் றேகன் நேற்று தனது மனைவி நான்ஸி சகிதம் கலிபோர்ணியா சென்றார்.

புதிய அதிபர் தனது மனைவி பார்பரா சகிதம் வெள்ளை மாளிகையில் குடியேறினார். (எ)

### றேகனுக்கு சோவியத் பாராட்டு

மாஸ்கோ, ஜன. 22

பதவி விலகிய 40-வது ஜனாதிபதி றேகனை வழமை மாறான முறையில், உலகின் பெரிய தலைவர் என்று சோவியத் அரசும் மாஸ்கோ பத்திரிகைகளும் பாராட்டின.

"வெற்றிகரமான ஒரு தலைவர். முரண்பாடுகளுக்கு இடையே சோவியத் - அமெரிக்க நல்லுறவை வளர்க்கப் பாடுபட்டவர் றேகன்" — என்று சோவியத் பத்திரிகை இஸ்வெஸ்தியா புகழாரம் சூட்டியது.

### தேவாலயத்தில் மதகுருவின் சடலம்

வார்ஸோ ஜன 22

போலந்து தலைநகர் வார்ஸோவில் உள்ள தேவாலயம் ஒன்றில் கிறிஸ்தவ மதகுருவின் சடலம் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டது. இது கொலை என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### அரபாத் வேண்டுகோள்

ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரவேல் நடத்திவரும் பிரகடனப்படுத்தப் படாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவிரைந்து செயற்படுமாறு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் ஐநாவுக்குவேண்டுகோள் விடுத்திருக்கிறார். (எ)

## காபூல் நிலைமை மோசம் ராஜதந்திரிகள் வெளியேற்றம்

காபூல், ஜன 22

ஆப்கன் தலைநகர் காபூலில் உள்ள வெளிநாட்டவர்களை உடனடியாக வெளியேறும்படி அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளே இப்படி தங்கள் பிரசைகளைக் கேட்டுள்ளது.

காபூல நிலை மோசமடைந்து வருவதைத் தொடர்ந்தே இப்பதற்றநிலை என்று சொல்லப்படுகிறது.

இதனிடையில் கெரில்லா முற்றுகையினால் உணவு இன்றி அவதிப்படும் காபூல் மக்களுக்கு வழங்கவென்று சோவியத் யூனியனின் 12 போக்குவரத்து விமானங்கள் உணவுப் பொருள்களுடன் காபூல் வந்திறங்கின.

மேற்கு ஜேர்மனி தனது ராஜதந்திரிகளை ஏற்கனவே காபூலில் இருந்து வரவழைத்துக் கொண்டது.

வெளிநாட்டு உதவி ஸ்தாபனங்களும் ஆப்கனில் பணிபுரியும் அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளன.

இதனிடையில் ஜலலாபாத்நகரைச்சுற்றியுள்ள பகுதிகள் மீண்டும் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாக காபூல் வானொலி அறிவித்தது.

இது தொடர்பாக கெரில்லாக்களுடன் நடந்த மோதலில் 470 கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர் என்றும் காபூல் வானொலி தெரிவித்தது.

இதேவேளை சோவியத் துருப்புக்கள் விலகிய பின்னர் அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் கெரில்லா அமைப்புக்களின் அரசில் இடம் பெறப்போவதில்லை என்று தெஹ்ரானில் இருந்து இயங்கும் 4 மெஜஹாதின் கெரில்லாக் குழுக்கள் அறிவித்துள்ளன.

ஆட்சிக் குழுவில் போதுமான இடங்களை ஒதுக்க, பாகிஸ்தான் பெஷாவறில் இருந்து இயங்கும் கெரில்லாக் குழுக்கள் ஒத்துழைக்க மறுத்தமையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. (எ)

### அங்கீகாரம்

டாக்கா, ஜன. 22

பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு முழு அளவிலான ராஜரீக அந்தஸ்தை பங்களாதேஷ் அரசு வழங்கியுள்ளது. (எ)

### பிரிட்டிஷ் அமைச்சர் கருத்து

லண்டன், ஜன 22

குடிவரவுச் சட்ட விதிகளைக் கடுமையாக்குவதன் மூலமே பிரிட்டனில் இன வேறுபாடுகள் தலைதூக்குவதைத் தடுக்க முடியும் என்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் அறிவித்தார்.

வார இறுதியில் நடைபெற்றதும் கட்சிக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

### ஒத்திவைக்கப்பட்ட மரணதண்டனை

லாஸா ஜன 22

சீன அரசுக்கு எதிராக திபெத் தலைநகரில் கலவரம் செய்தவர்களில் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு சீன இராணுவ நீதிமன்றம் 2 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட மரணதண்டனையை விதித்தது.

வேறு நால்வருக்கு ஆயுள் சிறைத்தண்டனையை நீதிமன்றம் விதித்தது. (எ)

### சீன - இந்திய நல்லுறவு

புதுடில்லி, ஜன 22

பிரதமர் காந்தியின் சீன விஜயம் எல்லைப் பிரச்சினைத் தீர்வு காணுவதில் ஓரளவு துணை புரிந்திருப்பதாக புதுடில்லியில் உள்ள சீனத்தூதர் தெரிவித்தார்.

கிருஷ்ணமேனன் நினைவு தினக் கூட்டத்தில் அவர் பேசுகையில் இதனைத் தெரிவித்தார். (எ)

### கோரிக்கை

மாஸ்கோ, ஜன 22

1991 இல் மாஸ்கோவில் நடைபெறவுள்ள மனித உரிமை மாநாடு இடை நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் இயக்க பிரமுகரான டாக்டர் அன்ட்ரீ சகரோவ் கோரியுள்ளார். (எ)

# இன எழுச்சியை அடக்க முடியாது

## திணறும் சோவியத் யூனியன்

தேசிய இனப்பிரச்சினைக்கு சுமுக தீர்வு கண்டநாடு என்று உலகமே கூறிய சோவியத் யூனியனில் மாநிலங்களிடையே உருவாகி வரும் இன எழுச்சி பற்றியதொரு கண்ணோட்டம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

இனங்களின் எழுச்சியை எளிதில் அடக்கி விடலாம்— சலுகைகளைக் கொடுத்து சரிக்கட்டிவிடலாம் என்றெல்லாம் ஆட்சியாளர்கள் கருதுகிறார்கள்.

—உலக முழுமையிலும் இதே போன்ற எண்ணத்தை ஆளுவோரும் அவர்தம் அடிவருடிகளும் இன எழுச்சியைக் கண்டு பொருமுவர்கள், இன எழுச்சியால் பாதிக்கப்படும் மேல்தட்டு வர்க்கத்தவரும் இதே மாயையில் தான் சிக்கி இருக்கிறார்கள்.

ஆனால் இனத்தினர் எழுச்சி என்பது அடக்குமுறையால் தடுக்க முடியாதது! சலுகைகளால் சரிக்கட்ட முடியாதது; உரிமைக் குரலை ஒலிக்கும் அந்த எழுச்சி அந்த உரிமைகளைப் பெற்றே திரும் என்பதற்கு எத்தனையோ கடந்த காலச் சான்றுகளைக் காட்ட முடியும்.

கடந்த காலத்தைக் காட்டிலும் நிகழ்காலத்தில் ஏராளமாக சான்றுகளைக் கூற முடியும்.

அதிலும் குறிப்பாக அமைப்புக்களிலேயே மிகவும் சிறந்த அமைப்பு என்று கருதப்படும்—கம்யூனிச அமைப்பிலும் கூட இனங்களின் எழுச்சி தடுக்கப்படுமாயின் அல்லது அடக்கப்படுமாயின் அதுபீறிட்டுஎழும் என்பதற்கு உலகின் முதல் சோஷலிச - கம்யூனிச நாடானசோவியத்ரஷ்யாவின் இன்றைய நிகழ்வுப் போக்குகளைக்காட்ட முடியும்.

தேசிய இனப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கண்டது சோவியத் ரஷ்யாதான் என்று உலக முழுவதும் என்று கூறிய காலம் ஒன்று உண்டு.

ஆனால் இன்று நடப்பது என்ன?

சோவியத் யூனியன் சோஷலிசக் குடியரசு என்று அழைக்கப்படும் அந்த நாட்டில் இன்று தேசிய இனங்கள் உரிமைக் குரல் எழுப்பத் தொடங்கிவிட்டன.

அது கலவரமாகி பல உயிர்களைப் பலிகொள்ளும் அளவுக்குப் பூதாகரமாக மாறிவருகிறது.

சமீபத்தில் பூகம்பத்தின் சேதத்துக்குப் பலியான ஆர்மீனியக் குடியரசில் இந்த இன எழுச்சி பீறிட்டுப் பாய்ந்தது.

சோவியத் ரஷ்யாவில் கம்யூனிச ஆட்சி அமைவதற்கு முன்னால் ஆர்மீனிய மக்களை துருக்கி அடிமைப்படுத்தி கொடுமைக்குள்ளாக்கியது படுகொலை புரிந்தது. 1895-இலும்1915- இலும் துருக்கிப் பகுதியில் இருந்த ஆர்மீனிய மக்கள் அனைவருமே அனேகமாகப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதன் காரணமாக ஆர்மீனியாவின் கிழக்குப் பகுதி இல்லாமலே போய்விட்டது மேற்குப் பகுதிதான் கம்யூனிட்ஸ் ரஷ்யாவுடன் சேர்க்கப்பட்டது.

ஆர்மீனியாவின் ... ஆர்மீனியாவின் எதிரிகள்.

இதற்குக்முச்கிய காரணம் ஆர்மீனிய மக்கள் கிறிஸ்தவர்கள், துருக்கி அஸர்பைஜான் மக்கள் முஸ்லிம்கள், ஆர்மீனிய மக்களுக்கு தனி கலாசாரம் உண்டு. தங்கள் தனித்தன்மையைக் காக்க விரும்புகிறவர்கள் அவர்கள்.

ஆனால் கம்யூனிச அரசு ரஷ்யாவில் ஏற்பட்டதும் அதன் முதல் அதிபர் லெனின் செய்தகாரியம் ஆர்மீனிய மக்களைப் பெரிதும் பாதித்தது.

துருக்கியில் அப்போது ஆட்சியிலிருந்த அட்டாடர்க் ரஷ்யாவுக்கு எதிராகப் போகவேமாட்டார். என்று எண்ணி துருக்கியுடன் ஓர் ஒப்பந்தம் செய்தார் லெனின்.

1921 ஆம் ஆண்டு ஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தை ஆர்மீனியா அஸர்பைஜான் - ஜோர்ஜியா குடியரசுகளின் அவர்களும் ஆதரித்தனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி ஆர்மீனியாவின் கணிசமான நிலப்பரப்பு துருக்கிக்கு தாரைவார்க்கப்பட்டது. மேலும் ஒரு பகுதி அஸர்பைஜானிடம் போனது.

நகோர்னி - கப்பாக் என்ற பகுதி அஸர்பைஜான் வசம் சேர்க்கப்பட்ட நாளில் இருந்தே அங்கு வாழ்ந்த ஆர்மீனிய மக்கள் கிளர்ச்சி செய்தார்கள்.

தனது அரசியல் போட்டிகளை கூட படுகொலை ... ஸ்டாலின். இந்த மக்கள் குரலை இரும்புக் கரம் கொண்டு நசுக்கினார்.

அதனால் அப்போது அந்த இன எழுச்சி அடங்கி இருந்தது.

ஆனால் கோர்பசேவ் ஜனாதிபதியாகி மக்களுக்கு மேலும் சுதந்திரம் கிடைத்த போது ஆர்மீனிய மக்களின் உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.

அஸர்பைஜானின் ஆதிக்கத்திலுள்ள நகோர்னி-கரபாக் பகுதி மக்கள் தங்களை ஆர்மீனியாவுடன் சேர்க்க வேண்டும் என்று கிளர்ச்சி நடத்தினார்கள்.

இதைக் கண்டித்து அஸர்பைஜான் தலைநகரான பாகு நகரிலும், தொழில் நகரான சும்காய்த் நகரிலும் ஆர்மீனிய மக்களுக்கு எதிராகக் கலகம் நடந்தது. அந்த நகரங்களில் சிறுபான்மையினராகிய ஆர்மீனிய மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இதனால் கலவரம் மூண்டது. அடக்க ராணுவம் அனுப்பப்பட்டது. ராணுவ வீரர்களில் இரண்டுபேர் உட்பட 28 பேர் கொல்லப்பட்டார்கள்.

இப்போது ரஷ்ய அரசு என்ன செய்வது என்பது தெரியாமல் திகைக்கிறது.

முடிவு கோர்பசேவ் கையில் இருந்தாலும்— ஆர்மீனிய மக்களின் அடக்கப்பட்ட உணர்வுகளை அவரால் திருப்திப்படுத்த முடியுமா என்பதே பெரும் கேள்விக்குறிய கியுள்ளது.

சோஷலிச ரஷ்யாவின் தந்தை என்று கருதப்பட்டு யாராலும் குறை கூறவே முடியாதவர் என்று கருதப்படும் லெனினைக்கூட ஆர்மீனிய மக்கள் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கி விட்டார்கள்.

துருக்கியுடன் அவர் செய்த ஒப்பந்தம் ஆர்மீனிய மக்களை அடகு வைத்து விட்டது. அது அயோக்கியத்தனமான ஒப்பந்தம்' என்று ரஷ்ய சரித்திர ஆசிரியர் பேரியன் பகிரங்கமாகவே விமர்சித்திருக்கிறார்.

ஆர்மீனிய மட்டுமல்ல எஸ்தோனியா என்ற குடியரசிலும் இதேபோன்ற உரிமைக்குரல் ஒலிக்கத் தொடங்கி விட்டது.

இந்தக் குடியரசின் மக்கள் தொகை வெறும் 15 லட்சம் தான். பரப்பு 45 ஆயிரம் சதுர கிலோமீட்டர் தான்.

என்றாலும் கூட இந்த மக்கள் தங்கள் இனம்— மொழி காக்கப்பட வேண்டும் என்ற உரிமைக்குரலை ஒலிக்கிறார்கள்.

'எங்கள் குடியரசில் வேறு குடியரசுக்காரர்கள் குடிபுகுந்து எங்களைச் சிறுபான்மையினர் ஆக்கிவிட்டார்கள். ரஷிய மொழி ஆதிக்கம் எங்கள் எஸ்தோனிய மொழியைய கலாசாரத்தை அழித்து வருகிறது' என்று எஸ்தோனிய குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களே குரல் கொடுக்கிறார்கள். எஸ்தோனிய மொழியிலேயே எழுத வேண்டும் பேச வேண்டும் என்று அந்த அரசு சட்டமே பிறப்பித்து விட்டது.

நிலைமை எந்த அளவுக்குப் போய்விட்டது என்றால், எஸ்தோனியக் குடியரசுக்கு தனிக் கரன்சிநோட்டு வேண்டும்: ரஷ்யாவின் ரூபிள் தேவையில்லை; இராணுவம் - வெளியுறவு தவிர்த்து எல்லாத்துறைகளையும் அந்தந்தக் குடியரசுகளிடமே ஒப்படைக்க வேண்டும் என்று கூறும் அளவுக்குக் கோஷங்கள் ஒலிக்கப்படுகின்றன.

அத்துடனும் நிற்கவில்லை.

சோவியத் குடியரசு தனக்குத் தன்னாட்சி, இறையாண்மை உரிமை வழங்கப்படாவிட்டால் பிரிந்துபோய் விடுவோம் என்று கூறுமளவுக்குப் போய்விட்டது.

சோவியத் யூனியனுடன் இருக்க விரும்பாத குடியரசுகள் பிரிந்து போகலாம் என்று அதன் அரசியல் சட்டம் கூறுகிறது. குடியரசின் மக்கள் விருப்பினால்...என்பது நிபந்தனை.

அந்த விருப்பத்தை எப்படித் தெரிந்து கொள்வது? பொதுவாக் கெடுப்பு மூலம் என்கிறது ரஷ்ய அரசியல் அமைப்பு. ஆனால் வாக்கெடுப்பு எப்படி நடத்தப்படும் என்பதற்குத் தெளிவான சட்டம்! இல்லை என்கிறார் திருவிடமன்.

ஆர்மீனிய - எஸ்தோனிய மக்கள் மட்டுமல்ல- உஸ்பெக்கிஸ்தான் - தார்த்தனியா மக்களும் கூட உரிமைக்குரலை ஒலி எழுப்பத்தொடங்கி விட்டார்கள்.

ஆரம்பத்திலேயே குறிப்பிட்டது போல, இன உணர்வு என்பது அடக்கப்பட முடியாதது. சலுகைகளால் சரிசெய்யப்பட முடியாதது என்பதைதானே!

பொன்னுக்காணித் தைலம்

இத்தைலத்தை தினமும் சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் மண்டையிடி, தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, பீலிசம் அதிக்கண் மங்குதல், தூக்கமின்மை, கண்ணெரிச்சல், உஷ்ணக்காந்தல் முதலான வியாதிகளை குணமாக்குவதோடு மூளைக்குக் குளிர்ச்சியையும், கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுத்து கூந்தலை அழகாகவும் கறுப்பாகவும் வளரச் செய்யும்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 7135



# உதயன்

23-01-1989 திங்கட்கிழமை



பிரம்மி கூந்தல் தைலம்

இத்தைலத்தை தினமும் சிரசில் பாவித்து வந்தால் தலைமுடி நரைத்தல், தலைமயிர் உதிர்தல், தலைவலி, கண்ணீர் வடிதல், தும்மல், மூக்கு அரிப்பு முதலிய ரோகங்களுக்கு நிவாரணம் தருவதோடு கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், கருமையாகவும் வளரச்செய்யும்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து நாகராசா

[முன்னாள் யாழ் மாநகரசபை பொது சன நூலகம்]

கந்தர்மடத்தைச் சேர்ந்த நாகமுத்து நாகராசா சிவபதம் அடைந்து விட்டார். இவர் நேசமணியின் அன்புக் கணவரும், தவராணி சுரேந்திரன், ஜெயராணி, புஷ்பராணி தர்மராசா (ஜேர்மனி), கலாராணி, பத்மராணி, நாகேந்திரராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரன், தர்மராசா, ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபாஷினி, ரூபிகா, துவாரகை ஆகியோரின் அன்புப் பேரனும், திருமதி நா. செல்லம்மாவின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23-1-1989 திங்கட்கிழமை முற்பகல் 9மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்கோம்பயன்மணல்மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும், உற்றார் உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சுரேந்திரன்

15/6, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம். (9056)

### அன்ரன் ரொசாரியோ தம்பித்துரை

(ஓய்வுபெற்ற மேலதிக காணிப்பதிவாளர்)

பண்டத்தரிப்பைச் சேர்ந்த அன்ரன் ரொசாரியோ தம்பித்துரை (ஓய்வுபெற்ற மேலதிக காணிப்பதிவாளர்) காலமானார். இவர் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் தம்பித்துரை தம்பதியின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற ஞானதேவியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கலாவதனி, ரொசாறியோ, சந்திரவதனா ஆகியோரின் பிரிய தந்தையும், திருமதி பற்றீஷியா குஞ்சுமணியின் அன்புக்கணவருமாவார். இறுதிச் சடங்குகள் பண்டத்தரிப்பில் 23-01-1989 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
யோக்கிம்

புனித அந்தோனியார் வீதி,
பண்டத்தரிப்பு. (9263)

### திருமதி சிவபாக்கியம் செல்லையா

திருமதி சிவபாக்கியம் செல்லையா 22.1.89 அன்று காலமானார். இவர் மகேஸ்வரி, தங்கம்மா, பாண்டுரெங்கன் (இலங்கை மின்சார சபை), அன்னலஷ்மி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், மகாதேவன், லலிதாதேவி, சர்வேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார். ஈமக்கிரியைகள் 23.1.89 திங்கட் கிழமை (இன்று) பிற்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
பாண்டுரங்கன்

முத்துமாரி அம்மன் கோயில் அண்மை,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (9058)

### அப்புத்துரை பாலசுந்தரம்

வண்ணார்பண்ணை அப்புத்துரை பாலசுந்தரம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் பாலசண்முகநாதன் (ஓய்வு பெற்ற இலிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்) பாலசரவணபவன் (வனபரிபாலனத் திணைக்களம், திருகோணமலை) பாலகுகன் (Marine Engineer, Greece) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், குணரஞ்சினி, புனிதவதி, பவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் கவிதா, தயாபாலன், சியாமளா, பாலமுகுந்தன், ஹேமலதா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணம் அரசடி வீதி 71/6 இலக்க இல்லத்தில் (வித்துவான் ஆறுமுகம் வீடு) நடைபெற்று இன்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள்.

(9057)

## OBITUARY

### Miss. Leela Thambiah

Miss. Leela Thambiah of Urelu, retired bursar of Uduvil Girls' College, daughter of the late Mr and Mrs V. Thambiah, beloved sistor of Mahes, the late Mahadevan Rani and Kamala, sistor-in-law of R Thampoe, the late Shanmugalingam and Punithavathy and loving aunt of Dushyanthy Sathianathan expired on the 22 nd of January 1989 Funeral will take place at "Karunalayam" Uduvil Girls' College at 11.00 a.m. on Monday the 23rd instant.

Mrs Rajendra Thampoe.

(9060)

## ஒதுக்கப்பட்ட பஸ்களில் 10 வாரஇறுதிக்குள் யாழ் வரும்

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய பஸ்களில் பத்து இந்த வார இறுதிக்குள் யாழ்ப்பாணம் வந்துசேரும்.

இவற்றை யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்குச் சாரதிகள் அனுப்பப்பட்டுள்ளனர் என்று வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு என 50 பஸ்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும்—

அவற்றில் முதற்கட்டமாகவே பத்து பஸ்கள் வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-10)

## தி. மு. கவினர் 25 இல் கூடுவர்

சென்னை, ஜன 23

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர்கள் நாளை மறுதினம் 25 ஆம் திகதி சென்னையில் கூடி புதிய முதல்வராக கலைஞர் கருணாநிதியைத் தெரிவு செய்வர் என அறிவிக்கப்பட்டது. (உ)

## நால்வர் அணியின் நாமமே இல்லை!

சென்னை, ஜன. 23

அ.தி.மு.கவிலிருந்து பிரிந்துசென்ற - வி. ஆர். நெடுஞ்செழியன் தலைமையிலான — நால்வர் அணிக்கு எந்தத் தொகுதியிலும் வெற்றி வாய்ப்பு இல்லை என அறிவிக்கப்பட்டது.

இந்த அணியைச் சேர்ந்த வேட்பாளர்கள் சுமார் ஐம்பது தொகுதிகளில் சுயேச்சையாகப் போட்டியிட்டனர்.

இந்த அணியின் நான்கு தலைவர்களில் வி. ஆர். நெடுஞ்செழியன், அரங்கநாயகம் ஆகிய இருவர் மட்டுமே தேர்தலில் போட்டியிட்டனர்,

மற்றைய இருவரில் ஒருவரான திருநாவுக்கரசு இறுதி நேரத்தில் ஜெயலலிதா அணியில் சேர்ந்துபோட்டியிட்டார். பண்ருட்டி இராமச்சந்திரன் தேர்தலில் போட்டியிடவில்லை (உ)

## பிரேமா யாழ் வருவார்?

யாழ்ப்பாணம், ஜன 23

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச எதிர்வரும் பெப்ரவரி ஆறும் திகதி யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவருடன் சிரேஷ்ட அமைச்சர்களும் கட்சியின் முக்கிய பிரமுகர்களும் வருகை தரவுள்ளனர்.

ஜனாதிபதியும் அவரது குழுவினரும்தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொள்ளவே இங்குவரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-1)

## இதற்கும் தண்டனை!

கொழும்பு ஜன 23

தேசிய புலனாய்வுப் பிரிவில் பணியாற்றிய இரண்டு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் அண்மையில் இடமாற்றஞ் செய்யப்பட்டனர்.

காரணம் அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவார் என்பதைச் சரியாக கணித்து முன்கூட்டி அறிவிக்கத் தவறியதே.

சம்மந்தப்பட்ட இரண்டு கான்ஸ்டபிள்களும் சுதந்திரக்கட்சி வெற்றி பெறும் என்று கணித்து தலைமைப் பீடத்துக்கு அறிவித்திருந்தனராம். (உ-எ)

## நாவாந்துறையில் நேற்று இருவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், ஜன 23

நாவாந்துறையில் நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி ஒன்றை அடுத்து அப் பகுதியில் கலவர நிலை ஏற்பட்டது.

கலவரம் உச்ச நிலையை அடைந்ததை அடுத்து அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது.

இதனால் இருவர் காயமடைந்தனர்: அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் வருமாறு:-
முகமட் அனஸ் (வயது 22)
முகமட் சாகுல் ஹமீத் (வயது 63)
(ஒ-10)

## ஒருவர் பலி

உடுப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் புளியடியில நேற்றுக் காலை இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பொதுமக்களில் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இரு படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-23)

## இளைஞர் சுட்டுக்கொலை

வல்வெட்டித்துறை, ஜன 23

கம்பர்மலை பங்குரன் குடியேற்றத்தில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிதம்பரன் தங்கராசா (வயது 33) என்பவரே உயிரிழந்தவராவார் (உ-160

## தெளிவான தீர்ப்பு! கருணாநிதி பேட்டி

சென்னை, ஜன 23

தமிழ்நாட்டு மக்கள் தெளிவான தீர்ப்பு வழங்கியிருப்பதாக தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி நேற்று பி பி சிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும்சொன்னதாவது:-

தமிழ்நாட்டு மக்கள் தெளிவான தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

அவர்களுடைய பாதுகாவலர் யார்? வேலைக்காரர் யார்? அவர்களுக்காகப் பணியாற்றக் கூடிய ஊழியர் யாரென்பதைத் தேர்ந்து தெளிந்து தெரிவு செய்திருக்கின்றார்கள்.

அவர்களுக்குத் தொடர்ந்தும் நாம் சேவை செய்வோம்.

தமிழ்நாட்டு மக்கள் தமிழ்மொழி, தமிழருடைய உரிமை ஆகியவற்றைக் காப்பதற்கும்-

மேன்மையைப் பேணுவதற்கும் —

தமிழகம் முன்னேற்றப் பாதையில் நடப்பதற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தான் தங்களுடைய உற்ற துணைவர் என்ற நம்பிக்கையை மீண்டும் பிரதிபலித்திருக்கின்றார்கள்.

தமிழக மக்கள் தந்துள்ள ஆதரவு, அவர்களுக்காகப் பாடுபட எமக்கு ஊக்கம் தந்திருக்கிறது.

கேள்வி: தாங்கள் மீண்டும் முதல்வராக பொற்காலத்துக்கு வருகிறீர்கள், தமிழ்நாட்டின் வாழ்வுக்கும் வளத்துக்கும் என்ன செய்யப் போகிறீர்கள்?

கருணாநிதி: துரிசுபிடித்துள்ள நிர்வாக இயந்திரத்தை மீண்டும் முடுக்கி விடவேண்டியுள்ளது:

## பாண்டியன் வென்றார்!

சென்னை, ஜன 23

சேரன்மாதேவி தொகுதியில் போட்டியிட்ட அ. தி. மு. க (ஜா) அணியின் வேட்பாளரும் தமிழக முன்னாள் சபாநாயகருமான பி. எச். பாண்டியன் 700 வாக்குகளினால் வெற்றி பெற்றார்

வாக்கு விவரம் வருமாறு.

★ பாண்டியன் (ஜா) - 26 113
★ ஆவுடையப்பன் [தி. மு. க] - 25,413
★ வேலுத்துரை [இ கா] - 23 320
★ ராம்சேட் [ஜெ] - 20 409

இந்தத் தொகுதியில் தொடர்ந்து நான்காவது தடவையாக பாண்டியன் வெற்றிபெற்றிருக்கிறார். [உ]

## ★ உருண்ட 'தலை'கள்

சென்னை, ஜன 23

தமிழகத் தேர்தலில் தோல்வியுற்ற ஏனைய சில தலைவர்களின் விவரம் வருமாறு:-

★ பனைமரத்துப்பட்டித் தொகுதியில் தி. மு. க. வேட்பாளர் எஸ். ஆர். சிவலிங்கத்திடம் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கராஜன் மோகன் குமாரமங்கலம் தோல்வி அடைந்தார்.

இவர் தமிழ்நாடு காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஆவார்.

★ கலைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சித் தலைவியாக இருந்த திருமதி டி. யசோதா பொன்னேரித் தொகுதியில் மூன்றாவது இடத்தைப் பெற்றுத் தோல்வி அடைந்தார்.

★ ராஜபாளையம் தொகுதியில் மத்திய அமைச்சர் எம் அருணாசலம் தோல்வியுற்றார்.

★ சாத்தான்குளத்தில் தமிழக இந்திரா காங்கிரஸின் துணைச் செயலாளர்களுள் ஒருவரான குமரி அனந்தன் பின்னணியில் இருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## எண்மர் விடுவிப்பு

காங்கேசன்துறை ஜன 23

காங்கேசன் துறை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேர் கடந்த சனியன்று விடுதலை செய்யப்பட்டனர்.

உதயகுமார்-தையிட்டி, மனோகரசீலன்—மயிலிட்டி, ராகவன் — மயிலிட்டி, செல்வமோகன்— யாழ்ப்பாணம், ரஷ்குமார்— யாழ்ப்பாணம், தம்பிமகன் — யாழ்ப்பாணம் சுல்தான் அப்துல் ராபிக் — யாழ்ப்பாணம், வேலு தெய்வேந்திரபிள்ளை— காரைநகர். (உ-68)

## முஸ்லிம் லீக் தலைவரும் தோல்வி

சென்னை, ஜன 23

இந்திராகாங்கிரஸுடன் கூட்டு வைத்துப் போட்டியிட்ட முஸ்லீம் லீக்கின் ஒரு பிரிவின் தலைவர் ஜனாப் ஏ. கே. சமது வாணியம்பாடி தொகுதியில் தோல்வியுறும் நிலையில் இருந்தார்

தி. மு கவுடன் கூட்டு வைத்துப் போட்டியிட்ட முஸ்லிம் லீக் அப்துல்லத்திப் பிரிவின் வேட்பாளரான ஜனாப் ஏ. கே. சமது வாணியம்பாடி தொகுதியில் முன்னணியில் நிற்கிறார்.

[உ-எ]

## சென்னையை முற்றாக தி.மு.க. சுவீகரித்தது!

சென்னை, ஜன 23

சென்னை மாவட்டத்தில் உள்ள 14 தொகுதிகளிலும் தி. மு. க அமோக வெற்றியீட்டும் நிலையில் இருந்தது

துறைமுகம் தொகுதியில் கலைஞர் கருணாநிதி 31 ஆயிரத்து 991 வாக்குகளினால்வென்றார்

ஆயிரம் விளக்கில் மு. க. ஸ்டாலினும்-

அண்ணாநகரில் தி. மு. க. பொதுச் செயலாளர் அன்பழகனும்-

புரசைவாக்கத்தில் ஆற்காடு வீரசாமியும்-

திருவல்லிக்கேணியில் நாஞ்சில் மனோகரனும் முன்னணியில் நின்றனர். (உ)

## பார்வையிட்டார்

வேலணை ஜன 23

நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் பிரதிநிதி எச்.ஓ.எல் எம் ஹோர்ம் வேலணையில் உள்ள அபிவிருத்திச் சபையின் உற்பத்தி பயிற்சி நிலையத்தை சில தினங்களுக்கு முன் பார்வையிட்டார்.

அவருடன் பனை அபிவிருத்திச் சபையின் இயக்குனர் திரு எஸ். பாலசிங்கம், பனை அபிவிருத்திச்சபையின் பிரதம லிகிதர் திரு. ரி. இராசரத்தினம் ஆகியோரும் வருகை தந்திருந்தார்கள். [உ- 167]

## யாழ் நகரைக் கட்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு வை. பஞ்சலிங்கம், வடக்கு, கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு வி. என். சிவராசா மாகாண சபை அங்கத்தவர்கள் மற்றும் யாழ் மாவட்டத்திலுள்ள பல்வேறு அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் பேசியபோது மேலும் கூறியதாவது:

யாழ் மாவட்டத்தில் சிதைந்த கட்டடங்களில் இடித்துத் தள்ளக் கூடியவை இடிக்கப்படும். திருத்தியமைக்கக் கூடிய கட்டடங்கள் திருத்தியமைக்கப்படும்.

இந்த நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்காக இந்தியாவிலிருந்து நிபுணர்களைக் கேட்டிருக்கிறோம் அதேபோல் எமது தமிழ் நிபுணர்களின் ஒத்துழைப்பையும் கேட்டிருக்கிறோம்.

### திருப்பித்தர நடவடிக்கை

இலங்கைப்படை அல்லது இந்தியப்படை நிலைகொண்டிருக்கும் எந்த ஒரு அரசாங்கக் கட்டடமும்தேவைப்படுகின்றது என அரச அதிகாரிகள் நினைத்தால் உடனே எங்களுக்கு அறியத்தாருங்கள் சில மணித்தியாலங்களில் அவற்றை திருப்பி எடுத்துத்தர நாம் நடவடிக்கை எடுப்போம்.

1983 ஆம் ஆண்டில் இருந்து மக்கள் பிரதிநிதிகள் இல்லாத வேளையிலும் மக்களுடைய தேவைகளை இழப்புக்கள் சோதனைகள் மத்தியிலும் நீங்கள் உணர்ந்து சேவையாற்றியுள்ளீர்கள்.

எமது இனத்தின் அரசியல் ரீதியான விடிவை நோக்கி பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தமது சுயநன்மைகளைத் துறந்து துன்பங்களையும், துயரங்களையும் தாங்கிப் போராடினார்கள்.

துன்ப, துயரங்கள் அனைத்துக்கும் மாகாண சபைதான் பலனு என்று யாரும் கேட்டால் போராட்டம் என்பது முற்றுப் பெறுததாகவே கருதப்படும்.

ஐந்து வருடங்கள் மிக உச்சக்கட்டமான இழப்புகளையும், 35 வருடங்களாக பின்தங்கிய நிலையையும் அடையும் சமுதாயம் எப்படி முன் செல்லமுடியும்?

மாகாண சபையின் ஆற்றல் நிர்வாகத் திறமை அனைத்தையும் மக்களுக்கு அளிக்கவேண்டிய பொறுப்புகள் உங்கள் சேவையில் தங்கியுள்ளது.

மாகாணசபையின் அரைவாசிப் பொறுப்புகளும் அதிகாரங்களும் உங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

இந்த அடிப்படையில் தான் புனரமைப்பு. புனர்வாழ்வு திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

இந்தத் திட்டங்கள் முதலில் மாநகர மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கிராம மட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படும்—என்றார்.

இம்மாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கமும் உரையாற்றினார்

(உ-ஜ-10)

## முன்னாள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளின் தமிழறிஞர்களும் பேராசிரியர் வித்தியானந்தனின் சேவைகளைப் பாராட்டியிருக்கின்றனர். (உ-எ)

## அமைச்சர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

★ கலைமணி
★ ராஜாராம்
★ திருமதி விஜயலட்சுமி பழனிசாமி
★ குழந்தைவேலு
★ வை எஸ். எம் யூசுப்
★ ப. உ. சண்முகம்
★ வி ஆர். நெடுஞ்செழியன்
★ கோவேந்தன்
★ அரங்கநாயகம்
★ எச். வி. ஹண்டே

## ஜானகி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அணி வேட்பாளர் பன்னீர்செல்வம் சுமார் 30 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அவ்வேளையில் ஜானகி அம்மையாருக்குச் சுமார் 20 ஆயிரம் வாக்குகளே கிடைத்திருந்தன.

(உ-எ)

## ஒட்டுசுட்டான் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

### இரண்டு கடைகள் எரிப்பு

ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது,

இச் சம்பவத்தை அடுத்து ஒட்டுசுட்டானில் இரு கடைகள் எரிக்கப்பட்டன.

இதேவேளை ஒட்டுசுட்டான் சம்பவத்தில் ஐவர் கொல்லப்பட்டனர் எனவும் அவர்களில் இருவர் பொதுமக்கள் எனவும் சொல்லப்பட்டது.

கொல்லப்பட்ட பொதுமக்களில்கம்பர்மலையைச் சேர்ந்த தம்பு இராசரத்தினம் (வயது 52) என்பவரும் ஒருவர்.

இதனிடையில் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் நேற்று பெரும் தேடுதலும் சோதனைகளும் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10-160)

## வல்வை ஆஸ்பத்திரிக்கு விசேட வைத்தியப்பிரிவு

மந்திகை வைத்தியசாலையில் இருந்து விசேட வைத்தியப் பிரிவு ஒன்று வல்வை இந்திராணி வைத்தியசாலை சென்றது.

அண்மையில் வல்வையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த சுமார் 130 பொதுமக்கள் இந்திராணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே

இவர்களைப் பார்வையிடுவதற்கும் பராமரிப்பதற்கும் போதிய வைத்தியப் பிரிவு இல்லாததாலேயே மேலதிக பிரிவு அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. (உ-160)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 23-01-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road. Jaffna on Monday 23rd January 1989



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org